ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, பவ-ஆு சித்திரை-மீ 17-உ (29—4—1934) | மலர் 23.


## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்,

## ஈரோடு.

3 அணா வெளியீடுகள்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

**மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:—** இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது.

**பிரபஞ்ச உற்பத்தி:—** இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

—*—

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

**பிரகிருதிவாதம்:—**இந்நூலில் கடவுள். மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

**வெ. ரா. சொற்பொழிவு**
விலை அணா 2.

**அகத்தியர் ஆராய்ச்சி**
விலை அணா 2.

**இராமலிங்க சுவாமிகள் பாடல்**
விலை அணா 2.

**சுயமரியாதைப் பாடல்**
விலை அணா 2.

**கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)**
விலை அணா 2.

**சுயமரியாதை தாலாட்டு**
விலை அணா 2.

**சோதிடப் புரட்டு**
விலை அணா 2.

**பர்னர்ட்ஷா உபந்யாசம்**
விலை அணா 1.

**இலங்கை உபந்யாசம்**
விலை அரை அணா.

**கத்தோலிக்கர் வீண் கூச்சல்**
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை | 0—6—C |
| மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ... | 2—0—0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... | 0—6—0 |
| சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| பகுத்தறிவு கீதம் ... | 0—1—0 |
| காந்தி கிட்டு ... | 0—1—0 |

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

**'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.**

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வெளிவந்து விட்டது! நமது புதிய பிரசுரங்கள்!!

# சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# பெண்களும் தொழிலும்.

:O:

## பெண்களும் தொழிலாளிகளே.

திருச்சி நீலாவதி.

பெண்களுக்கும் தொழிலுக்கும் பெருத்த சம்பந்தமுண்டு. சுருக்கமாகக் கூறவேண்டுமானால் பெண்களும், தொழிலாளிகளே! என்றால் பலர் ஒப்புக்கொள்ள மறுக்கின்றார்கள். குடும்பவேலை ஒன்றிற்காகவே பிறந்த பெண்கள் எப்படித் தொழிலாளிகளாவார்கள் என்றும் கேட்கப்படுகின்றது. பெண்களுக்கும், தொழிலுக்கும் சம்பந்தமில்லையென்பதும் பெண்கள் குறிப்பிட்ட சில (அதாவது குடும்பம் என்பதைக்கூட பின்னால் வைத்து ஆண்களுக்கு மனைவியர்கள் குழந்தைகளை ஈன்றெடுக்கவும்.) ஆனவேலைகளுக்கென்றே ஒதுக்கப்பட்ட ஒரு கூட்டம் என்பதும் ஆண்களோடு பெண்கள்சேர்ந்து தொழிலாளத் தன்மையை அடைய முடியாதென்பதும் அன்னோர் அபிப்பிராயம். இதற் கெடுத்துக்காட்டாக 'உத்தியோகம் புருஷலட்சணம்' என்ற வாக்கியத்தையும் சுட்டிக்காட்டுகின்றார்கள். உத்தியோகமென்பதற்கு ஓர் தனிப்பெருமை இருந்தே வருகின்றதென்பதை எந்த பகுத்தறிவு வாதியும் ஒப்புக்கொள்ள முடியாது, இன்று உத்தியோகங்கள் இருக்கும் நிலையும் அதற்காக மக்கள்படும் அவதியும் அதனால் மனிதசமூகம் அடையும் லாபமும் தெளிவாய் தெரிந்தே யிருக்கின்றன. தனிவுடைமைத் தன்மை எவ்வாறு தவிடுபொடியாக வேண்டுமோ அவ்வாறே உத்தியோகம் புருஷலட்சணம் என்பது ஒழிந்துபட்டு பொதுவாக உழைப்பு மனிதலட்சணம் என்று ஏற்படவேண்டும்.

ஏதோ ஒரு காலத்தில் ஆதிக்கம் வகுத்திருந்த ஒரு கூட்டம் தன் சுயநலத்திற்குத் தகுந்தாற்போல் சட்டங்களையும், பழமொழிகளையும் உண்டாக்கிக் கொண்டதற்காக அதை என்றைக்கும் தண்ணீர் வார்த்து வளர்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதை இங்கெடுத்துக் காட்ட ஆசைப்படுகின்றேன். பொதுவாக நமது நாட்டில் பெண்கள் படிக்க வேண்டுமென்றால் அதற்கடுத்தாற்போல் வரும் பதில் "பெண் படித்து உத்தியோகமா செய்யப் போகின்றது?" "எந்த ஆபீஸில் கணக்கெழுதப்போகின்றது?" என்பதுதான். ஆகவே அவர்கள் கருத்தில் பெண்களை உலக வாழ்வில் சம்பந்த மற்றவர்களாக ஒதுக்கி வைக்க வேண்டுமென்பதைத் தவிர வேறில்லை என்பது தெளிவாகின்றது. மேலும், குடும்பம் என்பதையே வைத்துக்கொண்டு பார்ப்பதாலும் சரீரத்தால் உழைக்கப்பட்ட மக்கள் யாவரும் தொழிலாளிகள் என்ற தன்மையில் "பெண்களும் தொழிலாளிகளே!" என்பது தெளிவாகும். குடும்பவாழ்க்கை என்பது ஒன்றிலேயே ஈடுபட்டிருக்கின்ற இன்றைய பெண்சமூகம் உழைப்பில் செக்குமாட்டுக்குச் சமமானதாயுள்ளதென்பதில் சந்தேகமில்லை. விடியற்காலை எழுந்ததிலிருந்து, இரவு படுக்கைக்குச் செல்லும்வரை பெண்கள் சரீரத்தால் சிரமப்பட்டு உழைப்பது இவ்வளவென்று சொல்லமுடியாது. பணக்காரர்களாய் பணக்காரத்தன்மையோடு வாழ்கின்ற ஒரு சில பெண்களைப்பற்றி இங்கு நான் பேசவில்லை. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது எண்ணிக்கையுள்ள பகலிரவாய்ப்பாடு படுகின்ற, உழைப்பிற்கே உயிரெடுத்து வந்த பெண்களைப்பற்றித்தான் இங்கு பேசப்படுவது. குடும்ப வாழ்க்கையில் பெண்கள் பெரும் உழைப்பாளிகளாய் மிளிர்கின்றார்கள். சமையல் வேலைக்காகப் பெண்கள் ஒதுக்கப்பட்டதும், பெண்கள் சமையல் தொழிலாளிகளாய் மிளிர்வதும், சமையல் (குடும்பம்)என்பதின் பொருட்டு, பெண்கள் வருஷம் 365-நாளும் சரீரத்தால் உழைக்கும் உழைப்பையும். கூர்ந்து கவனித்து கணக்கிட்டுப்பார்த்தால், பெண்களை சமையல் காரணமாகவே, தொழிலாளிகள் அல்லவென்று கூறி விட முடியாது. எனவே சரீர உழைப்பாளிகள் பெண்கள், பெண்கள் தொழிலாளிகள், என்பது ஒப்பவேண்டியதோர் உண்மை.

இவ்வாறு பெண் சமூகம் ஒருதொழிலுக்கே உரியதாகி, அத்தொழில் மூலமாகவே இன்று தாழ்த்தப்பட்டு ஆய்விட்டது. எப்படி ஆண் உழைப்பாளிகள் அனைவரும், இன்று உண்ண உணவிற்கும், உடுக்க உடைக்கும், இருக்க இடத்திற்கும், தவித்து வாடுகின்றார்களோ, அதேபோல் பெண்களும் எதுக்கும் உரிமையற்றவர்களாகி தாமரை இலை தண்ணீர் போல் தத்தளித்து வாடுகின்றார்கள். எனவே, பொதுவாக. தொழிலாளிகள் என்பதில் சமூகத்தின் சரிபகுதி எண்ணிக்கையான பெண்களையும் சேர்த்துத்தான் தீர வேண்டுமென்பதை யாரும் மறந்து விடக்கூடாது. மறுக்கவும் முடியாது. தொழிலால் தாழ்த்தப்பட்டு அடிமையாக்கப்பட்ட மற்ற சமூகங்கள் அநுபவிக்கும் இன்னல்களை விட இந்தப்பெண் சமூகம் அநுபவித்து வரும் இன்னல்கள் மகா கொடுமையாகும். நமது நாட்டில் ஒவ்வொரு, தனி ஜாதியாக ஒதுக்கி வைத்து, அடக்கி அவமானப்படுத்திய தன்மை மிகுந்த மோசமென்பதோடு அறிவுள்ள மனித சமூகம் அருவருக்கத்தக்கதுமாகும். இன்னும் சுருக்கமாகக் கூறவேண்டுமானால், உலகத்தில் ஒடுக்கப்பட்டு, கொடுமைக்கே உருவாகி, கோரக்காட்சியில் திகழ்கின்ற அத்தனை பேரும் தொழிலாளிகளே! தொழிலாளிகளே!! இவர்கள் எண்ணிக்கையே உலகில் மிகுதி; இவர்கள் உழைப்பே நாட்டை செழுமையாக்குகின்றன. இவர்கள் நிலையோ கண்ணீர் விட்டுக்கலங்க வேண்டியது. பெண்களின் கூட்டுறவே வாழ்க்கையை செம்மைபடுத்துகிறது. பெண்களின் உழைப்போ சமூகத்தின் அவசியமாகின்றது. இவர்கள் வாழ்க்கையோ, துன்பத்திற்கே இலக்கானது. இவர்கள் தேவைகள் நிறைவேற்றப்படவேண்டியதோ அனந்தம்! நிற்க இது காறும் சரீரத்தால் பாடு படும் அத்தனை பேரும், ஆண், பெண் அடங்கலும் தொழிலாள சமூகமே யென கூறி வந்தேன். இனி தொழிலில், ஆண்களுக்கு, வேறு, பெண்களுக்கு, வேறு, அதிலும் ஆண்கள் செய்யும் எல்லா தொழிலையும் பெண்கள் செய்ய முடியாது என்ற வாதத்தைப்பற்றிப் பேசுவோம். ஆண்கள் உயர்ந்தவர்கள், பெண்கள் தாழ்ந்தவர்கள், என்ற எண்ணம் மலிந்த நம் நாட்டில் பெண்கள் சகல தொழில்களிலும் கலந்து வேலை செய்து வெற்றியடைய முடியாது; என்று வேதாந்தம் பேசுவது பற்றி ஆச்சரியப்பட வேண்டியதில்லை. முன்னேற்றமடைந்த நாடுகள் என்று எண்ணிக்கையில் சேர்க்கப்பட்ட நாடுகளிலெல்லாம், எல்லாத் தொழிலும் ஆண் பெண் இரு பாலரும் கலந்தே வேலை செய்து வருகின்றார்கள். நமது நாட்டிலும் அந்த நிலை ஓரளவு இல்லாமலில்லை.

இன்று சாதாரணமாக நம் நாட்டில் ஆலைகளிலும், ஆஸ்பத்திரிகளிலும், கிராமாந்தரங்களில் வயல்களிலும் ஆண் பெண் இருபாலரும் கலந்து வேலை செய்து வருவதைப் பார்க்கிறோம். மற்றும் பொது நோக்காக நோக்கினாலும், தையல் நெசவு, வீடு கட்டுதல், சிறு கடைகள் வைத்து வியாபாரம் செய்தல், ஆகிய தொழில்களில் பெண்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். தற்காலத்தில், கல்வி முறையிலும், பெண்கள் படித்து, டாக்டர்களாகவும் ஆசிரியர்களாகவும், பத்திரிகை நடத்துவோர்களாகவும், இன்னும் இது மாதிரி பல தொழில்களில் கலந்து வேலை செய்து வருவது கண்கூடு. இந்தநிலை மேலும் விருத்தியடைய வேண்டுமென்பதே சம தர்மிகளின் பேரவாவாகும். பர்மா, மலாய் போன்ற நாடுகளில் பணக்கார வீட்டு பெண்களெல்லாம், வீட்டிலிருந்து கொண்டே, பாய் பின்னுதல், மிதியடி செய்தல் சித்திர வேலை, முதலிய தொழில்களைச் செய்வோர்களாய்; பணம் தான் இருக்கின்றதே யென்று எக்நேரமும் பாய்க்குத்துணையாகப் படுத்திருக்கும் சோம்பேறி வாழ்க்கையை அவர்கள் அணுவளவும் ஆதரிப்பதில்லை. எனவே, உலகில் பல தொழில்களிலும் பெண்கள் பங்கெடுத்துத்தான் வருகின்றார்கள். தொழில் தன்மையில் பெண்கள் சகல வற்றிலும், சரிசமமாகக் கலந்து வேலைசெய்யத் தொடங்கி விட்டால், அப்புறம் ஆண் உயர்வு, பெண் தாழ்வு, என்னும் பேதத்தன்மை ஒருவாறு குறைய ஆரம்பித்து விடும். இதை உத்தேசித்தே ஜெர்மனியில் ஹிட்லா, லட்சக்கணக்கான பெண்களைத் தொழில் புரிவதினின்றும் தடுத்து வீட்டுக்கு அனுப்பி, "வீட்டோடு நீங்கள் சரி, வெளியில் ஏறெடுத்தும் பார்க்காதீர்கள்" என்று அடக்கி ஆண்கள் ஆதிக்கத்திற்கு விதை போட்டு வளர்த்து வருகின்றார். போகட்டும். கொடுமை எத்தனை நாளைக்கு நீடித்திருக்கின்றன தெனப் பார்ப்போம். ஆக, தொழில் துறையில் பெண்கள் இன்னும் பெருமிதமாகச் சேரவேண்டும். இவ்வாறு கூறும்போது "ஆண்களே வேலையின்றி திண்டாடுகின்றார்கள். இனி பெண்களும் போட்டி போட்டால் இருவரும் சேர்ந்து திண்டாட வேண்டியதுதான்" என்று கேலியாகவும், கிண்டலாகவும், வயிற்றெறிச்சலோடும் பேசுகிறார்கள். இது ஓர் அர்த்தமற்ற கூற்றெனவே அறைகின்றேன். நமது நாட்டில் தற்போதுள்ள அரசியல் அமைப்பும், மக்கள் கஷ்டத்தைப்போக்கும் படியான மார்க்கத்[illegible] அமைந்து விட்டால், இப்பேர்[illegible]த்த வீண் வார்த்தைகளுக்[illegible] இடமில்லை.

### "மே" தினமும் பெண்களும்.

இனி "மே" தினத்தைப் பற்றியும்; பெண்கள் அதில் ஏன் பங்கெடுக்க வேண்டுமென்பதைப்பற்றியும் சிறிது கூறி இக்கட்டுரையை முடிக்கின்றேன். பெண்களும் தொழிலாளிகள் என்று கூறியபோது, தொழிலாளர் தினமாகிய "மே" விழாவில் பெண்கள் பங்கெடுக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்பதை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். உலகம் ஆண், பெண் உழைப்பாளிகளால் சூழப்பட்டது. உழைப்பாளியின்றேல் உலகத்தில் எதும் எதும் இல்லையென்றே கூறிவிடலாம். இன்று பொதுவாக உலகத்தில் உழைப்பாளிகள் எனப்பட்டோர் யாவரும் உழைத்து, உழைத்து, பயனை உழையாத ஒரு கூட்டமே அநுபவிக்க விட்டு வருகின்றார்கள். உழைப்பாளிகள், மாட மாளிகை, பட்டு பட்டாடைகள் இவைகளை அடையா விட்டாலும், தங்களுக்குத்தேவைப்பட்ட அளவு, உணவு, உடை, இடம் ஆகியவை கூட அடைந்து கவலையின்றி வாழ்வதற்கில்லை. தொழிலாளர்கள் பகலிரவாய் ஓய்வின்றி உழைத்தும் பசியின் கொடுமையை அறி

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

# மதம்! மதம்!! இஸ்லாம் மதம்!!!

(கொழும்பு தோழர் ஏ. எல்- முஹம்மத் தமீம்)

மனித சமூகத்திற்கு மதங்கள் ஒருவிதமான நன்மையும் செய்யவில்லை. ஆனால் மனிதசமூகம் ஓர் உன்னதப் பதவியடைந்து உலகில் இன்புற்று வாழ்வதற்கு மதங்கள் என்றும் நீங்காத முட்டுக் கட்டையாக வேயிருந்துவருகின்றன. மக்கள் தீயவழியில் நின்றும் விலகி நன்மையான பாதையில் நடந்துகொள்வதற்கென கடவுளால் உண்டாக்கப்பட்டதெனச் சொல்லப்படும் மதங்கள்தான் இன்று உலகில் நடைபெறும் சகல அக்கிரமங்களுக்கும் காரணமாய் இருந்து வருகின்றன என்பதுதான் இன்றைய அறிவாளிகள் உலகின் அபிப்பிராயமாகும். மதங்களால்தான் மனிதசமூகம் வெறிகொண்டு மதம், தேசம், ஜாதி போன்ற வேற்றுமைகளால் பிரிந்து கடவுள், மதம் தேசம் ஜாதி என்ற பெயர்களினால் கடுமையான யுத்தங்கள் புரியவும், அதன் பயனாய் தாங்க முடியாத வறுமைக்குட்படவும் வறுமையைச் சகிக்கமுடியாத காரணத்தால் பஞ்சமாபாதகங்கள் செய்தும் கஷ்டமடைந்து சதா சீரழிந்து வருகின்றது.

எனவே இம் பிரபஞ்சத்தில் சதா நிகழ்ந்துவரும் கொடிய பஞ்சமாபாதகங்களாகிய கொலை, களவு, விபசாரம், பொறாமை, கோட்[illegible], சூழ்ச்சி போன்[illegible]வைகளுக்கு வறுமையே காரண[illegible] அவ் வறுமையை அடியே[illegible]ற்றிப் பொருளாதார நி[illegible]யைச் சீர்படுத்தி இனியொ[illegible]தும் மனித சமூகத்தில் கடவுள், மதம், ஜாதி, தேசம், பாஷை என்ற பெயர்களினால் எந்தவிதமான யுத்தமும் நிகழாதவண்ணம் தடை செய்யக் கூடியதும், உலக மனித சமூக வாழ்க்கையில் சாந்தியும், சமாதானமும், உண்மையும், ஞாயமும் நிலவி எங்கும் எல்லோருக்கும் இன்பத்தை யளிக்கக் கூடியதுமான "சமதர்ம ஆட்சி" ஏற்பட வேண்டுமெனறும், அப்படிச் சமதர்ம ஆட்சி ஏற்படுவதற்குக் குறுக்கே கடவுளும், மதங்களும் முட்டுக்கட்டையாக இருப்பதால் அவைகளைப் பகுத்தறிவுக் கோடாலியால் வெட்டி, அடியோடு வீழ்த்தி ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு படமுடியாதினித்துயரம் பட்டதெல்லாம் போதும்! போதும்! என்று சதா முறையிட்டுக் கொண்டிருக்கும் ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதற்கு இன்று சமதர்மவாதிகள் கங்கணங் கட்டிக்கொண்டு இந்தியாவில்—இல்லை இவ்வகிலமெங்கும் வீரகர்ஜனை செய்துகொண்டும், தீவிரக் கிளர்ச்சிகள் செய்துகொண்டும், தங்கள் உயிர் சிறைவாசம் போன்றவைகளுக்கு ஒரு சிறிதேனும் அஞ்சாமல் மனுஷாபிமானமே தங்கள் ஜீவநாடியெனக் கருதி ஞாயமான வழியில் போராடி வரும் அறிவு, ஆராய்ச்சி, விஞ்ஞானம், ரசாயன வளர்ச்சிகள் மிகுந்த இந்த 20-ம் நூற்றாண்டிலே தோளோடு தோள்மட்டும் நின்று தொழுதுவிட்டு அப்பால் முகத்தையேனும் பாராமல் ஏமாற்றித் துரத்திவிடுவதையே "சகோதரத்துவம்" "சமத்துவம்" என்று வீண் விதண்டாவாதம் செய்யும் சில முஸ்லீம்கள் இன்று உலகில் மிக மிகத் தீவிரமாகப் பரவிவரும் சுயமரியாதை இயக்கத்திற்கு எதிராகச் சிலர் கூக்குரலிட்டும்சுயமரியாதை இயக்கத்தை அடக்கிவிட்டோம், ஒடுக்கிவிட்டோம்" [தற்சமயம் இஸ்லாம் மதம் ரஷ்யாவில் இறந்துவிட்டதையும், துருக்கிபோன்ற இதரத் தேசங்களில் இறக்குந் தருவாயிலிருப்பதையும் இவர்கள் முஸ்லீம்களை அறியார்கள் போலும்! பாபம்!! மேற்படி விஷயம் இவர்களுக்குத் தெரியாவிடில் மேற்படி நாடுகளில் இஸ்லாம் மதம் அழிந்து போனதையும், அழிந்து வருவதையும் இதைப் படைத்த அல்லாஹ்வே (கடவுளே) எதிர்த்து ஒன்றும் பயன்படவில்லாமற்போய்விட்டதென்றும் சொல்ல விரும்புகின்றோம் என்று வீண் தற்பெருமையடித்துக்கொள்வதை நோக்க நமக்கு நகைப்புத்தான் வருகின்றது.

மனுஷாபிமானத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கும் பகுத்தறிவியக்கத்தவர்களின் தத்துவம், கொள்கை, நோக்கங்களை கண்டித்தும், எதிர்த்தும் வருவதற்கு முஸ்லீம்களுக்கு எத்தகைய உரிமையும், சுதந்திரமும் உண்டோ, அத்தகைய உரிமையையும் சுதந்திரமும் பகுத்தறிவாளிகளாகிய எங்களுக்கும் முஸ்லீம் மதத்திலுள்ள குருட்டு நம்பிக்கைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும், குற்றங் குறைகளையும் பகிரங்கமாக எடுத்துக் காட்டுவதற்கு உண்டென்பதை அவர்களுக்கு (முஸ்லீம்களுக்கு) அறிவித்துவிட்டு இனி முஸ்லீம்கள் நம்பும்-எங்களை நம்பும்படி வற்புறுத்தும் அல்லாஹ் (கடவுள் என்ற வெறும் பதம்) ஒன்று உண்டா என்றும் அவ்வல்லாஹ்வுக்கு அக் கடவுளுக்கு இவர்கள் சொல்லும் சக்தி, கருணை, நியாயம் அணுவளவேனும் உண்டா என்றும் இன்னும் கடவுளால் உலக மனித சமூகத்திற்கென உண்டாக்கப்பட்டதெனச் சொல்லப்படும் இஸ்லாம் மதமும் அதன் கொள்கைகளும் பகுத்தறிவுக்கொத்துவருகின்றதா என்றும், இஸ்லா மதம் மனித சமூகத்திற்கிடும் சட்ட திட்டங்களை (மூலாதாரக்கொள்கைகளை) மனித சமூகத்தால் அல்ல பெரும்பான்மையானவர்கள்களாகிய ஏழை முஸ்லீம்களால் எடுத்துநடக்க முடியுமா என்று சற்றுச் சுருக்கமாக இதனடியில் ஆராய்வோம்:—

கடவுளைப்பற்றி முஸ்லீம்கள் கூறுவது (1) கடவுள் ஒருவர் உண்டு (2) கடவுள் உலகைச் சிருஷ்டித்தார் (3) கடவுள் ஆதிமனுஷன் மனுஷி ஆதத்தையும் ஹவ்வாவையும் சிருஷ்டித்து அவர்களிருவரிலிருந்தே மனித சமூகத்தை உண்டாக்கினார் (4) கடவுள் சர்வசக்தியுடையவர் (5) கடவுள் அளவற்ற அன்பும் நிகரற்ற கருணையுமுடையவர் (6) கடவுள் பட்சபாதமற்ற மஹாஞாயமுடையவர் (7) கடவுள் உண்மையுடையவராகவும் உண்மையை விரும்புகிறவராகவும் உண்மையை நிலைநாட்டுபவராகியுமிருக்கின்றார் (8) கடவுள் சகலமும் அறிந்த திரிகால ஞானி (9) கடவுள் செய்கையில் ஒருவருக்கும் குற்றஞ்சொல்ல முடியாது (10) கடவுள் எல்லாவற்றையும் அவர் சொந்தப் பிரியப்படியே செய்து வருகின்றார் (11) கடவுளன்றி உலகில் அணுவும் அசையாது என்பவைகளே.

•• இவைகளுக்கு நமது சுருக்கமான மறுப்புகள் பின்வருமாறு

(1) கடவுள் ஒருவர் உண்டா இல்லையா என்ற விஷயத்தைப் பற்றப்பரிசீலனை செய்யும் முன் அதன் அர்த்தம் இன்னதுதான் என்று அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அர்த்தமற்ற அதாவது பிரயோஜன மற்ற விஷயத்தில் தலையிடுவது அறிவீனமேயாகும் கடவுள் என்ற பதத்திற்கு கட-கடந்த உள்-உள்ளம் அதாவது உள்ளத்தைக் கடந்த என்ற அர்த்தத்தைவிட வேறு எந்தவிதமான அர்த்தமும் வைக்க முடியாது. கடவுள் என்ற பதத்தைக் கேட்டவுடன் அது நமது அறிவுக்கேனும் அல்லது வேறு எந்த புலன்களுக்கேனும் இன்னதுதான் என்று புலப்படுகின்றதாகவுமில்லை. மேலும் கடவுள் என்ற......யோ உலகம் தோன்று தொட்டு இன்றுவரை ஒருவரும் கண்டதுமில்லை! ஒருவர் கண்டதாகச்சொன்னதுமில்லை! ஆகலால் கடவுள் என்ற பதத்திற்கு அர்த்தம் இன்னதுதான் என்று தெரியாததும் நமது அறிவு வாக்குக் காயங்களுக்கு சற்றேனும் எட்டாததுமான ஒருவஸ்து உண்டென்பது அது உண்மைக்கு முற்றிலும் மாறானது மன்றி ஞாயப்படி பொய்யாகும். (2) உலகைக் கடவுள் சிருஷ்டித்தாரென்றால், கடவுளையார் சிருஷ்டித்தார் என்றும், உலகத்தைக் கடவுள் சிருஷ்டிக்குமுன் அவர் (கடவுள்) எங்கிருந்தார் என்றும், என்னசெய்து கொண்டிருந்தார் என்றும், இன்றேல் கடவுள் ஒன்றுஞ் செய்யாமல் சோம்பேறித்தனமாகவா யிருந்தார் என்றும் முஸ்லீம்கள் மூலமே கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம் (3) முஸ்லீம்கள் சொல்வதுபோல் கடவுள் மனுஷன் மனுஷி ஆதத்தையும் ஹவ்வாவையும் சிருஷ்டிக்குமுன் இப்பிரபஞ்சத்தில் வேறு மனிதர்கள் இருந்ததில்லையென்றும், அவ்விருவர்களிலிருந்தே மனித சமூகத்தை உண்டாக்கினார் என்றால் ஆதித்தந்தையால் ஆதத்திற்கும் ஹவ்வாளுக்கும் பிறந்த ஆண்பிள்ளைகளுக்கு மனைவிகளும் பெண்பிள்ளைகளுக்கு கணவன்மார்களும் எங்கிருந்து வந்தார்களென்று கேட்க விரும்புகின்றோம். ஏனெனில் முஸ்லீம்களின் மேற்படி கொள்கைப்படி பார்த்தால் ஆதம் ஹவ்வாளுக்குப்பிறந்த ஆண்களுக்கு மனைவியாய் வருவதற்கு அவர்கள் தாயாகி ஹவ்வாவைத்தவிரவேறு ஒரு மனுஷியும், பெண்களுக்குக் கணவனாய் வருவதற்கு

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

# தொழிலாளியும் பொதுவுடமைக் கட்சியும்

(தோழர் ப. ஜீவானந்தன்.)

நெருக்கடி.

உலகப் பொருளாதார நிலைமை பாதாளத்தை நோக்கிப் பயங்கரமான வேகத்தில் சென்றுகொண்டிருக்கிறது. பொருள்களோ திணை திணை மிதமிஞ்சி உற்பத்தியாகி அமோகமாக மலை மலையாய்க் குவிந்து கிடக்கின்றன. உற்பத்திக்கேற்ற விற்பனையோ கிடையாது. கடந்த 5 வருஷங்களாய் வியாபார மந்தமும், பொருளாதார நெருக்கடியும் மனித வர்க்கத்தின் குரல்வளையைப் பிடித்து அமுக்கி மூச்சுத் திணறும்படி வைத்துக்கொண்டிருக்கும் கொடிய கோரக் காட்சியை நாம் ஒவ்வொருவரும் அனுபவித்து வருகிறோம். சம்பளப் பிடித்தம் ஒரு பக்கம், கதவடைப்பு மற்றொரு பக்கமாக விஷப் பாம்புபோல் அடிக்கடி தலைகாட்டுகின்றன. வேலையில்லாத் திண்டாட்டத்தால் தொழிலாளிகள் ஆயிரக்கணக்கில், லட்சக் கணக்கில் தவியாமல் தவிக்கிறார்கள். பட்டினியும் பசியும், கஷ்டநிஷ்டூரங்களும் தொழிலாளர் உலகத்தில அக்கிரமமாகப் புகுந்து அநீதமாகச் சர்வநாசஞ்செய்துகொண்டிருப்பதைச் சகித்துக்கொண்டிருப்பது எவ்வாறு?

வகுப்புப்போர்.

இன்றைய உலகில் பாட்டாளிகள் முதலாளி-தொழிலாளி வகுப்புப் போராட்டத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். நித்திய தரித்திரர்களான ஏழைகளை எண்ணைச் சட்டியில் போட்டு வறுப்பதைப்போல இராப் பகலாய் கசக்கிப் பிழிந்து கொழுக்கும் பணக்காரரின அட்டூழியத்தை நெஞ்சைக் கிழித்து உடம்பைவைத்துச் சுட்டாலும் மறக்க முடியுமா? முதலாளிகொடுமைகள் எண்ண முடியாது ஏட்டிலடங்காது. எங்குநோக்கினும் முதலாளி ஆதிக்கம் பயங்கர சொரூபத்தில் தலைவிரித்தாடுகிறது. முதலாளிகள் தொழிலாளிகளிடம் ஒட்டிக்கு இரட்டிவேலை வாங்கினாலும் ஒனறுக்குப் பாதி சம்பளம கொடுப்பதால் தொழிலாளிகளைச் சாறு பிழிந்த சக்கையாக்குகின்றார்கள். தற்காப்பினிமித்தம் தொழிலாளர் சங்கங்களை நிறுவும் தொழிலாளிகளை முதலாளிகள் வேலையிலிருந்து நீக்குவதோடு இதன் காரணமாய் வேலை நிறுத்தம் ஏற்பட்டால் இரகசிய ஆட்களையும கொலைகார வன்னெஞ்சர்களையும் கருவியாக உபயோகித்துக் கிளர்ச்சியை அடக்கி ஒடுக்கிவிடுகிறார்கள். சில பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர் கிளர்ச்சியை அடக்க அரசாங்கச் சிப்பாய்களையும் போலீஸ்காரர்களையும் கொண்டு அதிகாரத்தையும், பலத்தையும் பிரயோகிப்பதுமுண்டு. அதற்கும் அவர்கள பாச்சா பலிக்காவிட்டால் தொழிலாளிகளின் வீடுவாசல்களையும், சங்கங்களையும் இடித்து நாசமாக்குவதே முதலாளிகளின் வேலை. அதற்கும் பயப்படாமல் தொழிலாளிகள் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தால் ராணுவத்தை ஏவித் தொழிலாளிகளை அடித்துச் சுட்டுத் துவைத்து வேலைநிறுத்தத்தைப் பாழ்படுத்தியிருக்கின்றார்கள். ஆயினும் பந்து அடிக்க அடிக்க எழும்புவதுபோல் தொழிலாளிகள் ட்ரேட் யூனியன்களை ஸ்தாபித்துப் போராட்டத்தை நடத்தி வந்திருக்கிறார்கள்

வேலை நிறுத்தக்காரர்களை போலீசார் கொலைசெய்ததும், கொடுமைப்படுத்தியதும் தொழிலாளர் தலைவர்களுக்கு ராஜத் துவேஷக் குற்றஞ் சாட்டப்பட்டு 5 முதல் 10 வருஷங்கள் வரை சிறைதண்டனை விதிக்கப்பட்டதும், தீவாந்திரசிக்ஷை கொடுக்கப்பட்டதும் உலகச் சரித்திரத்தில் கழிந்த 50 வருஷங்களில் மலிந்து காணப்படுகிறது. இவை முதலாளிக் கூட்டம் தொழிலாளி வர்க்கத்தை எவ்வாறு வாட்டி வதைத்து நசுக்குவதற்குத் தயாராயிருக்கிறதென்பதற்குப் போதுமான உதாரணங்கள்.

சிக்கலும் மீட்சியும்.

லட்சுமி புத்திரர்கள் பசுக்களைப்போல் பணிந்துகிடக்கும் தொழிலாளிகளை வதைத்துக் கொள்ளை கொள்ளையாக லாபமடைகிறார்கள். குறைந்த கூலியில் அமிதமாகப் பொருள்களைத் தயார் செய்கிறார்கள். இதோடு நிற்கவில்லை முதலாளிகளின் சுயநலமுஞ்சூதும். எதிர்பார்க்கப்படும் உலகயுத்தத்தில் ஏகாதிபத்தியங்களின் பொருட்டு பலியிட முதலாளிகள் கட்டுப்பாடற்ற பாமரத் தொழிலாளிகளைத் தயார் செய்து வருகிறார்கள். இன்றையப் பொருள் உற்பத்தி, மக்களின் அவசியத்தைப் பூர்த்திசெய்வதற்காக அல்ல; முதலாளிகளின் லாபத்தைப் பெருக்குவதற்காக. அதிக உற்பத்தியால் உற்பத்திசெய்யும் தொழிலாளிக்குக் குண்டூசி முனையளவு கூட நன்மையில்லை. அரசாங்கங்களில் வரவு செலவு வரவர அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆனால் தொழிலாளிகளோ, வரவர அதிக க்கஷ்டத்திற்கு இரையாகி மரணத்தின் வாசற்படியில் விழுந்து கிடப்பதைப் பார்க்கிறோம். பத்தியையும் சம்பளக்குறைப்பையும் எதிர்க்கக் கட்டுப்பாடோடிருக்க வேண்டியது அத்யாவசியம். லட்சக்கணக்கான தொழிலாளிகள் பின்னிப்பிணைந்து பிரிக்கமுடியாத கூட்டுறவோடு வாழ்ந்து போராடினால் தான் முதலாளிகளின் குரூர ஆதிக்கத்தையும் அமிதமான உற்பத்தியையும் தடுக்கக் கூடும். தொழிலாளர்களுடைய கட்டுப்பாட்டினால் தான் மனிதவர்க்கத்திற்கு நிரந்தர இன்பத்தையூட்டும் சமதர்ம ஆட்சிக்கு அடிகோலமுடியும்.

நண்டைக்காக்கும் நரிகள்

தொழிலாளிகள் அவர்களுடைய சங்கங்களில் சாதாரண அங்கத்தினர்களாயிருப்பதனால் மாத்திரம் போதிய பலனைப்பெறலாமென்று நினைப்பது வீண். ஏனென்றால் முதலாளிகள் தொழிலாளர் சங்கங்களையும் கைவசப்படுத்திக்கொண்டு, தொழிலாளிகளை நசுக்குவதற்கான பல வழிகளிலும் கெட்டிக்காரத்தனத்தோடு முயன்று வருகிறார்கள். இதற்கு உதாரணமாக இந்தியாவிலுள்ள, லேபர் பெடரேஷன், ட்ரேட் யூனியன் காங்கிரஸ்முதலியவைகளைக் கூர்ந்து பாருங்கள். இவற்றைச் சார்ந்தஸ்தாபனங்களையும் கண்ணைத்துடைத்துக்கொண்டு நோக்குங்கள். அங்கத்தினர்களாக நிரம்பியிருப்பவர்கள் கஷ்டப்பட்டுழைக்கும் தொழிலாளிகள் தான். ஆனால நிர்வாகஸ்தர்களில் முக்கியஸ்தர்கள் யார்? பாடுபடாதபெரியஉத்தியோகஸ்தர்களும் சோம்பேறிச்சுகஜீவிகளுமே. ஜோஷிகளும்மேத்தாக்களும கிரிகளும சிவராவ்களும் தொழிலாளர் தலைவர்களென்றால் வேறென்னவேண்டும்? இந்த முக்கியஸ்தர்கள் முதலாளிகளுக்கு உளவாயிருந்து வருகிறார்கள். முதலாளிகளுடைய கட்சியையும் போக்கையும் அனுசரித்து வருகிறார்கள். தொழிலாளிகள் வேலைநிறுத்தம்செய்தால் அவர்களின் உத்வேகத்தையும் ஊக்கத்தையும் தணித்து, வேலை நிறுத்தத்தைப் 'புல்' என்றுபோம்படிசெய்கிறார்கள் இவர்கள் உபதேசத்தை மீறித் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தால் சூழ்ச்சி செய்து அதனைப்பாழ் படுத்தி வருகிறார்கள். இது அனுபவ உண்மை. எத்தனைசந்தர்ப்பங்களில் இந்த முக்கியஸ்தர்களின் போக்கு யோக்கிதையற்றதாயும், செய்கை நாணயமற்றதாயும் இருக்கிறதென்பதைசமதர்மிகள்நன்கறிவர். லேபர் பெடரேஷன் முதலாளிகளின் ஒரு அங்கமாக இருந்து வருகிறதென்பதுஉலகப்பிரசித்தம் ஆகவே முதலாளி ஆதிக்கத்தை ஒழிக்குமுன் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களை இருந்த விடந்தெரியாமல் செய்யவேண்டியது தொழிலாளிகளின் முதற்பெருங்கடமையாகும்.

தொழிலாளிகள் எவ்விதமுதலாளித்துவ பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ளாமல் தங்களுடைய ட்ரேட்யூனியன்களை நிறுவவேண்டும். தன்கையே தனக்குதவி என்பதை உணர்ந்து ஒருமுகமாக [illegible]ல் தொழிலாளிக்கு மக[illegible]ளைச் நன்மையுண்டு. சிதறிக்கிடக்கும் போர்வன்மை கொண்ட ட்ரேட் யூனியன்களை ஒன்று கூட்டி, ஒற்றுமையில் வலிமை காண வேண்டும்.

மத்தியதரக்கோஷ்டி.

இன்று அரசாங்க இயந்திரத்தை ஓட்டும்நிர்வாகம், மத்தியதரக்கோஷ்டி முதலாளிவர்க்கம் இவர்கள்து கையிலேயே இருக்கிறது. நடைமுறை சர்க்காரோ முதலாளி கூட்டம். மத்தியதர வகுப்பார் கூட்டுறவுக்கும் தொழிலாளர் அமைப்பின்றிப்பிரிந்து நின்று சீர்குலைவதற்கும் பெருந்துணை. இந்நிலையைத்தான் நமது அக்மைப் புலவரும்

"முரசடித்துப் பெருமக்கள்
உடைமைதன்னை
முதலாளி வர்க்கத்தின்
வயிற்றில்தள்ள
அரசென்று சொல்லுகிறார்"

என்று அழகுற எடுத்து காட்டுகிறார். நம் நாட்டிலுள்ள குடி அரசுஜனநாயக கட்சிகளெல்லாம் மத்தியதரக்கோஷ்டியாரின் கட்சிகள்தான் இவை முதலாளிகளின்

ரோஜா முத்தையா

பிரதிநிதிகளை வெளிப்படையாகச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக காங்கிரஸை எடுத்துக்கொள்ளலாம். இந்தக்காட்சிக்கு முதலாளிகள் பொருளுதவி செய்வதோடு, இதில் முக்கியஸ்தானமும் வகித்து, தொழிலாளி வகுப்பார்களுடைய உரிமைகளைப் பிடுங்கி எறியும் நோக்கத்தோடு உழைப்புக்கும்முயற்சிக்கும் அதிகபடியாகவே கட்சியின் கொள்கைகளைத்தங்களுடைய ஆதிக்கத்திற்குசாதகமாகப்பிரயோகப் படுத்திவருகிறார்கள். மத்தியதர வகுப்பார் செய்யும் ஜனநாயகக் கிளர்ச்சி எல்லாம், முதலாளி தத்துவத்திற்கு ஜன'நாயகவேஷம்போட்டு' அரசியல் ஆதிக்கத்தை முதலாளி வர்க்கத்தினிடமே ஒப்படைப்பதாயிருக்கிறது. ஆகவே தொழிலாளிகள் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியார், சர்க்கரைக்கட்டி போல் பேசினாலும் மலை போல் நன்மை செய்வோமென்று ஆசைக்காட்டினாலும், முதலாளிவர்க்க கூலிகளின் பசப்பு வார்த்தைகளென்று அற்றை உதறித்தள்ளும் துணிவு பெறவேண்டும்.

### அபேத வாதக்கட்சி.

இதுஇன்றைய முதலாளி சமூகத்தைத்தலைகீழாக மாற்றிதொழிலாளிசமூகமாக அமைக்கும்போராட்டத்தை விட்டு விட்டு மத்தியதர வகுப்பாரின் கட்சியாக மாறி விட்டது. இதில், முதலாளி சூழ்ச்சிகளிலிருந்து தப்பிவருபவர்களும் தொழி[illegible]ற்கு சமுதாயக்கட்சி செய்த[illegible]கத்தை அறியாதவர்களும், ம[illegible]தர வகுப்பாரின் ஊழியர்களான சிலருமே இருக்கிறார்கள். நேரடியாக முதலாளி வர்க்கத்தை எதிர்க்கும் தைரியம் இதற்கு இல்லை. சமரசஞானத்தில் சறுக்கி விழுந்து, தொழிலாளிக்கு நன்மை என்று முதலாளிக்கு ஆக்கம் தேடிக்கொடுக்கும் கட்சி இது. இங்கிலாந்திலிருந்த ராம்ஸே மாக் டொனல்டின தொழில்கட்சியும் ஜெர்மனியிலிருந்த முபுலரின் சமுதாய ஜனநாயகக் கட்சியும் இப்படிப்பட்டவை. இந்தியாவிலும் ட்ரேட் யூனியன் காங்கிரஸில் பெரும்பாலார் இப்படிப்பட்டவர்களே. தொழிலாளிகள் இத்தக்கட்சியைப் பொறுத்தும் மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

### போது உடமைக்கட்சி

சகலதேசங்களிலும்: ல்லாக்காலங்களிலும் தொழிலாளர்களுடைய நன்மைக்கும்மேன்மைக்கும்உழைக்கக்கூடியகட்சி ஒன்றே. அது தான் பொதுஉடமைக்கட்சி. கீழ்காணும் திட்டங்களால் பொது உடமைக்கட்சிதான் தொழிலாளரின் உண்மையானகட்சி என்பதை உணரக்கூடும்.

I சர்வசாதரணமான தினசரி உரிமையைப் பாதுகாப்பதிலிருந்து இறுதியாக முதலாளித்துவத்தைப் பூண்டறப்பொசுக்கும் வரையிலுள்ள போராட்டத்துக்கும் தொழிலாளராசைஸ்தாபிக்கச்செய்யும் பிரயத்தனத்திற்கும் கொடுமைக்கிரையான வர்களின் பூரண ஆட்சியை ஏற்படுத்தும் தத்துவத்திற்கும் பொது உடமைக்கட்சி வழிகாட்டுகிறது.

2 பணக்கார—மத்திய தரவகுப்பார்களிடமிருந்து தொழிலாளர்களை விடுவித்து நன்னிலைமை ஏற்படுத்தவும், உண்மையானபோராட்டத்தை நிகழ்த்தக் கூடிய ட்ரேட் யூனியன்களைஸ்தாபிக்கவும் அதுவழிகாட்டுகிறது.

3 பணக்கார-மத்தியதரவகுப்பார் ஆதிக்கத்தைக் கொண்ட அசசாங்கம் இழைக்கும் குரூரமான கொடுமைகளை எதிர்த்து தொழிலாளர் சங்கங்கள் முழு வன்மையுடன் போராடவும் அது வழிகாட்டுகிறது.

4. தொழிலாளர்பெடரேஷன் சமுதாயக்கட்சி ஆகியவைகளின் துரோகங்களைத் தொழிலாளிக்குப்புட்டுப்புட்டுககாட்டி, அவற்றின் குட்டை உடைத்து சாயத்தை வெளுக்கசெய்ததோடு, தொழிலாள வகுப்பாரின் அக்குகளையும் பாத்தியதைகளையும் வற்புறுத்துகிறது.

5. தாழ்த்தப்பட்டோர், நீக்ரோக்கள், மலைவாசிகள் உள்ளிட்டு சகல ஒடுக்கப்பட்ட மக்களுடைய பரிபூரண சுதந்திரத்துக்காகவும், சமூக பொருளாதார அரசியல் சமத்துவத்திற்காகவும் அது போராடுகிறது.

6. பெண்கள், !வாலிபத் தொழிலாளர்கள் இவர்களுடைய உரிமைகளையும் வசதிகளையும் இமைபோல் காப்பதிலும், குழந்தைகள் தொழில் புரிவதை ஒழிப்பதிலும் அது முனைந்து நிற்கிறது.

7 வேலையில்லாதவர்களையெல்லாம் ஒன்று திரட்டி, முதலாளிகளின் வாழ்க்கையின் மீது முழு உத்திரவாதம் செய்யும்படி வேலையுள்ள தொழிலாளிகளோடு போரிட அது அறை கூவி அழைக்கின்றது.

8. தொழிலாளி வகுப்பார் ஜன சமூகத்தில் அதிகார ஆட்சியை அமைக்கும்படி தயார் செய்யவும், வருங்காலப்பொது உடமைக்கு அஸ்திவாரமாயிருக்கும்படி சமதர்ம அடிப்படைத்திட்டத்தின் மீது சமூகத்தைத்திருத்தி அமைக்கவும் அது முன் நிற்கிறது.

ஆகவே பொதுஉடமைக்கட்சிதான் தொழிலாளர்களுக்குப் பூரணமாயுழைக்கும் ஒரே கட்சி. நெருப்பில் அகப்பட்ட புழுவாய்த் துடிக்கும் தொழிலாளிகள் இதை உணர்ந்து நடந்தால் வெற்றி நிச்சயம்.

### தொழிலாளர் கடமை

"தான் வாழவித்தெடுக்கும்" அற்பமனப்பான்மையோடு சுயநலப்புலிகளாகத் தொழிலாளிகள் பிரிந்து தனிப்பட்டு நிற்கும் தோறும் முதலாளிகளின் அநியாயக் கொள்ளை "ஜாம் ஜாம்" என்று நடந்து கொண்டேயிருக்கும். முதலாளிப் பூதங்கள் அரசியல் அதிகாரத்தோடு சகல பலத்தையும் கொண்டு ஒன்றாய்க் கூடிக்கும்மாளம் அடித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றைநிர்மூலமாக்க அதாவது முதலாளித்தனத்தைத் தவிடு பொடியாக்க வேண்டின் லட்சக்கணக்கான தொழிலாளிகள் தங்களுடைய முழுபலத்தையும் ஏகோபித்துப் பிரயோகிக்க வேண்டியது அவசியம். ஒற்றுமையைக்கூட்ட ஏற்ற வழி சங்கஸ்தாபனம் தொழிலாளர் சங்கங்களே அவர்களின் பொருளாதார அரசியல் விடுதலைக்கு வழிகாட்டிகளென்பது திண்ணம். தொழிலாளர்களின் முழுநிர்வாகத்திலுள்ள உண்மையான ட்ரேட் யூனியன்களை ஆயிரக்கணக்கில் நிறுவுதல் வேண்டும். தொழிலாளர் கொள்கை கம்யூனிஸ்டின் கொள்கையாகிய சர்வதேசியமேயன்றித் தேசியமல்ல, சர்வதேச உணர்ச்சி தொழிலாளிகளின் ஆற்றலை வளர்க்கும் வகுப்புப்போராட்டம் அரசியல் போராட்டம் முதலாளிகையிலுள்ள அரசியல் ஆதிக்கத்தைத் தொழிலாளிகைப்பற்ற வேண்டும் பொதுவுடமை சமதர்மகட்சியார் நிறுவும் தொழிலாளி சர்க்காரால் தான் அரசியல் போராட்டம் ஒரு முடிவுக்கு வரும் பொதுவுடமைக்கட்சியின் உதவியன்றி தொழிலாளிவகுப்பார் சரியானசக்தியோடு முதலாளிவர்க்கத்தை எதிர்த்துப்போராட முடியாது. பொது உடைமைக்கட்சியின் கீழ்த்தான் தொழிலாளர் தஙகளுடைய பூரணசக்தியை உணர்ந்து சரித்திர பூர்வமான அதிகாரத்திற்கு முடிவுசூணக்கூடும். தொழிலாளிகளின் உயரிய அமைப்புத்திட்டக்கட்சி பொது உடைமைக்கட்சி ஒன்றே. இதுவே அவசியமேற்படும் காலத்தில் அவசியமான அமைப்பு முறைகளை வகுத்து தொழிலாளரிடையே தலைமைவகித்து நடத்திச்செல்லும்.

ஆகவே தொழிலாளர்கள் பொது உடமைக்கட்சியில் இரண்டறக்கலந்து விடவேண்டும் முதலாளிகளின் கையாட்களாகி தொழிலாளர் தலைவரெனப்பகல் வேஷமிட்டுத்திரியும் வஞ்சக நரிகள் ஒரு சிலரின்சீனிதடவியவிஷமப்பேச்சில்மயங்காது தொழிலாளிகள் பொது உடைமைக்கட்சியில் முங்கி முழுகக் கடமைப்பட்டிருக்கிறார்கள். வாழ்ந்திருக்க எண்ணுகின்ற தொழிலாளர்கள்,

"வாழாது பயப்படுத்திவசப்படுத்திச்,
சூழ்ந்திருக்கும் விதி கோயில் கடவுளென்ற
தொலையாத ஆஸ்திகத்தின் குடுமிபற்றிப்
பாழுங்கிணற்றிற் எறி; அதன் மேல் கல்லைப்போடு'

என்ற நமது சமதர்மப்புலவரின்கட்டளைப்பொன்னுரையை இந்தியத் தொழிலாளத் தலைவர்கள் ஆழ்ந்து யோசித்துக்கடைப்பிடிக்ககேட்டுக்கொள்கிறேன் மார்க்ஸின் தத்துவத்தால் லெனினுடைய அனுபவ வாழ்க்கையால் சமதர்ம ஐகயசோவியத் குடி அரசின் ஆட்சிமுறைப்பயன்களால், நமது அறிவிலே ஏறிய உண்மையும் நரம்பிலே தாக்கின அன்பும் குருதியிலே கலந்த வீரமும், எலும்பிலே பாய்ந்த ரோஷமும் நம்மை விட்டு என்றும் அகலாது தொழிலாளரிடையில் உழைப்போமாக. சமதர்மிகளே! யுத்தகளத்தில் இறங்குங்கள்! பொது உடமை ஓங்குக!

தொழிலர்ளர் வாழ்க!!

---

## ஸ்டெலின் நவரட்ணம்.

---

கொழும்பில் முதன் முதல் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவர்களும், சுயமரியாதை தோழர்களுமான, குஞ்சிதம் சிதம்பரம் தம்பதிகளுக்கு சென்ற (4—3—34) ஒரு ஆண் மகவு பிறந்து கடந்த (8—4—34) அன்று தோழர் எ. எம். துரைசாமி அவர்களால், சீர்திருத்த முறைப்படி ஸ்டாலின் நவரட்ணம் என்று பெயர் இடப்பட்டது. திரளாக சுயமரியாதை தோழர்கள் பிரசன்னமாயிருந்தார்கள். சுயமரியாதை சங்கீத கச்சேரியும் நடை பெற்றது.

# சமதர்ம உலகில் பெண்கள்.

தோழர். ஜெயசேகரி B. Sc.

சமதர்ம உலகம் தொழிலாளிகளின் உலகம் என்பது உலகப் பிரசித்தம். ஆயினும் இவ்விஷயத்தில் தெளிந்த ஞானம்பெற்றவர்மிகச்சுருக்கம் சமதர்மத்தைப்பற்றி ஆரம்பப் பாடம் படிக்கிறவர்களுக்கும் ஆடவர்களெல்லோரும் சமதர்ம உலகில்தொழிலாளிகளாகவேயிருப்பார்களென்று கூறினால் சந்தேகம் நிகழவில்லை. ஆனால் அங்கு ஆண்களைப்போல் பெண்களுக்குங்கூட யாவரும் தொழிலாளிகளாகத்தான் இருப்பார்களென்றுசொன்னால்அநேகருக்குச்சந்தேகங்களும், விபரீதங்களும் முளைக்கின்றன. வருங்காலத்தில் தொழில் விஷயத்தில் பெண்கள் நிலைமையென்ன? என்பதைக்குறித்து அநேகர் உள்ளத்தில் இன்னும் பெருங்குழப்பம் நுரைவிட்டுக்கொந்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். எதிர்காலத்தில் ஏற்படப் போகும் உன்னதமான சமுதாய வாழ்வில் பெண்கள் தொழில் புரிய வேண்டிய அவசியத்திலிருந்து பூரணமாக விடுதலை பெறுவார்களென்பது பலரின் யூகம். குடும்ப விவகாரங்களிலும், இல்லற காரியங்களிலுமே பெண்கள் தங்களுடைய புத்தியையும் சக்தியையும் செலுத்தி முழு உழைப்பையும் வரையறுத்துக் கொள்வார்களென்பது வேறு பலரின் அபிப்பிராயம். இந்த இரண்டுவித அபிப்பிராயங்களும் தவறானவை. ஏனென்றால், இவை முன்னேற்றத்திற்கு நேரடியாக முட்டுக்கட்டை போடுகின்றன. மனித வாழ்க்கையின் பரிணாமத்தைத்தழுவாதகருத்துக்கள் இவை. இவ் எண்ணங்கள், மனித வர்க்கம், கீழ்த்தரசமூகவாழ்க்கைக்குப் பின்னோக்கிச் செல்வதைக் குறிப்பதால், சரியல்ல.

ஃ ஃ ஃ

சமதர்மசகாப்தத்தில், பெண்கள் வேலை செய்ய வேண்டிய பொறுப்புத் துளிகூட இல்லாது, "ஹாயா" கத்திரிவார்களென்றால், அது மனித வர்க்கத்தின் முற்போக்கைக் காட்டாது; கீழ்த்தரமானபிற்போக்கையே காட்டும். அந்நிலைமை, பெண்ணினத்தையே, அந்தப்புரத்திலிருக்கும்இன்றைய ஸ்திரீகளுக்கு ஒப்பாகத்தாழ்த்திவிடும். மேலும் சமதர்மத்தை அசாத்தியமான சங்கதியாக்கவுங்கூடும், ஒருக்கால் சாத்தியமாக்கினாலும், மனித வர்க்கம் வெகுவேகமாக க்ஷீணித்து, பாதாளத்தில் வீழ்ந்து புதைக்கப்பட்டுப் போவதற்குத் தூண்டுகோலாயிருக்கும். சமதர்ம உலகிலும் பெண்கள் குடும்பச் செக்கையே சுற்றி வருவார்களானால் அவர்கள் யோக்பதை, இயந்திரங்களும், நீராவிசக்தியும், மின்சார சக்தியும் தோன்றுவதற்கு முன்னிருந்த கர்நாடகமாகமேயிருக்கும் வேலை செய்யாத வாழ்வு, பெண்களைப்பொது வாழ்விலிருந்து துண்டித்துப் பிரித்து விடும்; பெண்களால் சமூகத்திற்கேற்படும்பிரயோஜனத்தை நஷ்டமாக்கும்; பெண்மக்களைப்பொருளாதார அடிமைத்தனத்தில் ஆழ்த்தும். இது, பெண்களுக்கு நல்ல சந்தர்ப்பத்தை அளிப்பதாகுமா? பழைய அடிமைத்தனம் புதிய போர்வையில் காட்சி கொடுப்பதாகவே முடியும். நிற்க, வருங்காலப் பெண்களை, வீட்டு விவகாரத்தில் மாத்திரம் மாட்டிவைப்பதுமுடியாத காரியம். ஏனென்றால், பிரயோஜனகரமாக வேலைசெய்யத் தகுந்த, ஆரோக்கியமுள்ள பெண்மக்களுக்கு வீட்டு வேலைகள் மட்டும் போதுமானதாகா. தற்காலத்தில்கூட, நமது பாட்டிமார்களை, காலையிலிருந்து இரவு வரை சுறுசுறுப்பாக வேலை வாங்கிக் கொண்டிருந்த அநேகக் குடிசைக் கைத்தொழில்கள் இருந்த விடந்தெரியாமல் மறைந்து போயின. குழந்தைகளின் கல்வியும் சமூகவிஷயமாக மாறிவிட்டது. மக்கள் முன்னேற்றமடைய அடைய, தொழில்கள் யாவும் பொதுவாக்கப் படுவதோடு, பொதுக் கல்வியும் சிறந்த முறையில் அமைந்து அபிவிருத்தியடையும். பெண்களின்வேலை வீட்டு எல்லையைத்தாண்டி, ஸ்டோர்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும், ரஸாயன சாலைகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும், சர்வகலாசாலைகளுக்கும் சென்றுவிடும். அப்பொழுது, பெண்களின் வேலையென்று, தனித்துக்கூறுவதுமாறி, மனிதர்களின் வேலையென்றேற்படும். பெண்மக்கள் யாவரும் வீட்டினுள்ளேயே இருந்து செய்யத்தகுந்த அவ்வளவு வேலை இன்று கூடக்குடும்பங்களில் இல்லை. எதிர்காலத்தில் இதைவிட மிகக்குறைந்துவிடும். இனிமேல் ஒருக்காலும், இயந்திரங்களுக்குப்பதிலாக, கைக்கருவிகள் வரவே வராது. குடிசையில் செய்யப்படும் மெழுகுவர்த்திகளை ஏற்றிக்கொண்டு, மக்கள் ஒருக்காலும் மின்சாரவிளக்கை பகிஷ்கரிக்கமாட்டார்கள். அதுபோல், நிச்சயமாக இனிமேல் யாரும் சிறிய குடும்பவாழ்க்கையைக் காதலித்து, விசாலமான சமூக வாழ்க்கையை அலட்சியம் செய்து விடமுடியாது. சமதர்மக்கொடியின்கீழ், பெண்கள்வேலை செய்யமாட்டார்களென்றும் குறிப்பிட்ட சில வேலைகள் மட்டுமே செய்வார்களென்றும், யூகிப்பது, சமதர்மிகளின் வாதத்தையும், அனுஷ்டானத்தையும் தவறாக உணர்ந்து கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஃ ஃ ஃ

இன்று வேலைசெய்யாத பெண்கள் யார்? சமூகத்திற்குப் பயன்படாத ஒரு சிறுகூட்டத்தார். சமூகப்புல்லுருவிகளான இப்பெண்கள், தங்களின் பயனற்ற வாழ்வாலும், சுயநலமோகத்தாலும் மலடிகளாய் நசித்துப்போகிறார்கள். வேலை செய்யும் பெண்கள் யார்? பிறர்உழைப்பில் வாழாத பெண்கள் எல்லோரும். ஆபீஸ்களிலும், கச்சேரிகளிலும், ஸ்டோர்களிலும், பண்டகசாலைகளிலும், பாக்டரிகளிலும், தொழிற்சாலைகளிலும், கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகளிலும் வித்யாபீடங்களிலும், சமையலறைகளிலும், போஜனசாலைகளிலும், வயல்களிலும தோட்டம்துரவுகளிலும், சுருங்கச்சொன்னால் தனிவாழ்விலும், பொதுவாழ்விலும் இன்று பெண்கள் யாவரும் பாடுபட்டுத்தான் வருகிறார்கள் தற்காலத்தில்தான் பெண்கள் யாவரும் உழைக்கிறார்களென்பதல்ல; மனிதவர்க்கம் முளைத்தநாள் முதலே உழைத்து வருகிறார்கள். ஆண்களுக்கு முன்பே பெண்கள் பாட்டாளிகள். எல்லாத் தொழில்களிலும் முன்னோடிகளும் உற்பத்திகர்த்தாக்களும் அவர்கள்தான். ஆண்மக்கள் போர்வீரர்களாகவும், பொருள்களை அழிப்போராகவும் ஒருகாலத்தில் இருந்த பொழுது, பெண்மக்கள்தான், பண்டங்களை உற்பத்தி செய்வோராகவும், பக்குவம் செய்வோராகவும் இருந்தனர். சமுதாயவாழ்வின் பரிணாமத்தில் ஒவ்வொரு காலத்திலும் தொடர்ச்சியாகப்பெண்ணும் தொழிலும் பிரிக்கமுடியாதபடி பின்னிப் பிணைக்கப்பட்டிருந்து வருவதைக்காணலாம். இவ்வாறு இடைமுறியாது, உடைபடாது தொடர்ச்சியாக, ஒழுங்காக வந்துகொண்டிருக்கும் சமூக வாழ்வின் பரிணாமப்போக்கை, வருங்கால சமதர்ம வாழ்வால் தடுத்து முறித்து மாற்றி அமைத்துவிடக்கூடுமென்று நாம் எவ்வாறு நம்புவது.?

ஃ ஃ ஃ

சென்றகால, நிகழ்காலப் பெண்களைப்போல், வருங்காலப் பெண்களும் வேலை செய்வார்களென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆடவர்களைப்போல் அவர்களும்பல்வேறு தொழில்களைச் செய்வார்கள். தற்காலத்தில் வாழும் பெரும்பாலான மக்களின் வேலைப்பாடுகளைப்பார்க்கிலும், அவர்களுடைய வேலை, லேசாகவும், பகுத்தறிவுக்கொத்ததாகவும், மனோகரமானதாகவும், ஆரோக்கியத்திற்கிசைந்ததாகவும், ஆனந்தத்திற்கு அனுகூலமானதாகவுமிருக்கும். பொதுவாக வாழ்க்கை முழுவதும் உழைப்பையே ஒட்டிக்கொண்டுதொங்குகிறது. ஆகவே, மனித ஜீவிதத்தில் உழைப்பே முக்கியமாகக் கௌரவிக்கத்தக்கதென்ற தீர்மானத்தை அஸ்திவாரமாகக் கொண்டுதான் சமதர்ம சமூகம் கட்டியெழுப்பப்படும். அந்த சமூகம் எல்லோருக்கும் தொழில் கொடுக்கும்; எல்லோருடையதேவைகளையும், அவசியங்களையும் பூர்த்தி செய்யத்தக்க மார்க்கங்களைக் கையாடும். வேலையற்ற ஆணோ, பெண்ணோ, அந்த சமூகத்தில் மருந்துக்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# போல்ஷவிக் இயக்கம்

## லெனின் வெற்றி

1917ம் வருடம் நவம்பர் மாதம் 15ந்தேதி ரஷிய சோவியத் ராணுவம் மாஸ்கோ நகருக்குப் படை எடுத்து சென்று வெற்றி பெற்றது. மேற் கூறிய சோவியத் ராணுவத்தை போல்ஷ்விக் இயக்கத் தலைவரான லெனினே நடத்திச் சென்றார். மாஸ்கோவை ஜெயித்து ரஷியாவில் சோவியத் ஆட்சியை நிலை நாட்டினர். லெனின் போல்ஷவிக் இயக்கத்தை ஆரம்பித்ததைப் பற்றியும் அது நாளடைவில் எவ்விதம் அபிவிருத்தியடைந்து வந்ததென்பதையும் வ. டி. ஷாபிக் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்:—

கார்ல் மார்க்ஸ், இங்கில்ஸ், பிலிக்கானே முதலியவர்கள் எழுதிவைத்த விஷயங்கள் உண்மையில் உலகில் நடைபெறுமோவென முதலாளிகளும், பொருளாதார நிபுணர்களும் மதாச்சாரியார்களும் சந்தேகம் கொண்டிருந்தார்கள்; மார்க்ஸ் அக்காலத்திலேயே தொழிலாளர் இயக்கத்தைப்பற்றியும், முதலாளிகள் அக்கிரமங்களைப் பற்றியும் போதித்து வந்தார். பிலிக்கானே மார்க்ஸ் கொள்கையையே அடிபடையாகக் கொண்டு வேலை செய்து வந்தார். இவர்கள் கொள்கையானது 1917-ம் வருடம் ஏற்பட்ட ரஷிய கலகத்துககுக் காரணமாகும். தொழிலாளர் இயக்கம் ரஷியாவில் அதிக மும்முறமாக நடைபெற்றது. இவ்வியக்கத்தை இங்கு தோற்றுவித்தவர் லெனினே யாவர். அவர் வெறும் பிரசங்கத்துடனும் தர்க்கத்துடனும் நின்று விடவில்லை. தமது கொள்கையைப் போதித்து வந்ததோடு, அதற்காக முதலில் தாமே அரும் பெரும் பாடுபட்டு உழைக்கவும் முன்வந்தார்.

### லெனின் கொள்கை.

அவர் தொழிலாளர் அபிவிருத்தியில் சதா சவனஞ் செலுத்தி அவர்களுடைய ஈடேற்றத்துக்காகவே தமது உயிரை அர்ப்பணஞ் செய்வ தென்ற உறுதி கொண்டிருந்தார். ரஷியாவில் அவ்வியக்கத்தை ஆரம்பித்து இறுதியில் வெற்றி பெற்றார். லெனின் தமது வாலிப காலத்திலேயே மார்க்ஸ் கொள்கைகளை நன்கு படித்து வந்தார். இத்துடன் அவரிடம் நல்ல பொருளாதார ஆராய்ச்சியுமிருந்தது. லெனின் நல்ல வாக்கு சாதுர்யமுடையவர். திறமையாகப் பேசுவார். அவர் 1894-ம் வருடம் தேசிய வேலையில் ஈடுபட்டார். மறு வருடத்தில் ரஷிய சர்க்கார் அவரைக் கைது செய்து சைபீரியாவுக்கு நாடு கடத்தினர்.

### லெனின் தப்பிய விதம்.

லெனின் சைபீரியாவில் சுமார் 4-வருட காலமிருந்தார். அங்கிருந்து 1900-ம் வருடம் தப்பியோடி மீண்டும் ரஷியத் தொழிலாளர் இயக்கத்தை மும்முரமாக நடத்தி வந்தார். ரஷியாவில் ரஷிய சக்கிரவர்த்தி ஆட்சியையும் முதலாளிகள் அட்டகாசங்களையும் அடியோடு தகர்த்தெறிய வேலை செய்து வந்தார். இதனால் ரஷியாவெங்கும் குழப்பம் ஏற்பட்டது. பல விடங்களில் பலாத்காரமும் தோன்றின. மாஸ்கோ பீட்டர்ஸ் பார்க் என்னும் இடங்களில் வேலை செய்து வந்த தொழிலாளர் பொது வேலை நிறுத்தஞ் செய்தனர். ரஷிய சக்கிரவர்த்தியை தொலைப்பது முடியாத காரியமாயிருந்தது. ரஷிய சர்க்கார் மீண்டும் லெனினைக் கைது செய்து ஜெனிவாவுக்கு அனுப்பினார்கள். அவர் அங்கும் சும்மாயிருக்கவில்லை. ஜெனிவாவிலிருந்து கொண்டே வேலை செய்து வந்தார். 1917ம் வருடம் மார்ச்சு மாதம் 8ந் தேதி லெனின் இயக்கமானது காட்டுத்தீபோல் ரஷியா எங்கும் பரவியது.

### தொழிலாளர் இயக்கம்

ரஷியாவெங்கும் தொழிலாளர் இயக்கம் மின்னல் போல் பரவியது. "விவசாயிகளுக்கே நிலம் சொந்தம், பாடுபட்டு உழைப்பவர்ளுக்கே உணவு கொள்ள உரிமையுண்டு" என்ற கொள்கை தொழிலாளரிடை பரவிற்று, தொழிலாளர் ஒவ்வொருவரும் லெனின் மீண்டும் அவ்வியக்கத்தை நடத்த முன் வந்திருப்பதைக் கண்டு ஆனந்தித்தார்கள். 'லெனின் வந்து விட்டார். இரத்த வெறி கொண்ட ரஷிய சக்கிரவர்த்தியை அடியோடு தொலைக்க வேண்டு" மென ரஷியத்தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர்.

### லெனின் முதல் வெற்றி

1917-ம் வருடம் நவம்பர் மாதம் உலக சரித்திரத்திலேயே குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் உலக தொழிலாளர் முன்னேற்றத்துக்கு அம்மாதமே முக்கியமானது. விசேஷமாக ரஷிய தொழிலாளர் ஈடேற்றத்துக்கு அம்மாதம் முக்கியமானது. தொழிலாளர் கதியை நிர்ணயித்தது அம்மாதமே யெனலாம். மனித சரித்திரத்திலேயே இது குறிப்பிடத்தக்கதாகும். உலகமே இக்காலத்தில் தவித்துக் கொண்டிருந்தது. எங்கும் கலகமும் யுத்தமுமாக இருந்தது இக்காலத்தில் தொழிலாளர் வெற்றி பெறக் கூடிய சம்பவம் நேர்ந்தது குறிப்பிடத்தக்கது. நவம்பர் மீ 7-ந் தேதி ரஷிய சோவியத் கட்சியார் பெட்ரோகிராட் மீது படையெடுத்துச் சென்று, அதை ஜெயித்தார்கள். இதுவே ரஷிய போல்ஷவிக்கருக்கு முதல் வெற்றியாகும் ஆகவே இத் தினத்தை சர்வதேச தொழிலாளர் சங்கத்தார் விசேஷ தினமாகக் கருதிவருகிறார்கள் ரஷிய சோவியத் கட்சியாரும் இத் தினத்தையே தங்கள் வருடாந்தரதினமாகக்கொண்டாடி வருகின்றனர். உலகமெங்குமுள்ள பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் இதை விசேஷ தினமாவக்கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது.



ரஷ்யவீரர் லெனின்.

### ரஷிய கலகம்

ரஷியாவெங்கும் கலக மயமாகவேயிருந்தது. இவ்வியக்கமானது ரஷ்யாவில் மட்டுமன்று. உலகத்திலுள்ள சகல முதலாளிகளையும் ஆட்டிவைத்த தெனலாம். இத்துடன் அரசர்களின் எதேச்சாதிகாரத்தைத் தொலைக்கவும் ஜனங்களிடையே ஒருவித உணர்ச்சி உண்டாயிற்று, "தெய்வத்திடமிருந்து அரசர்களுக்கு நேராகக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமை" யென அக்காலம் நம்பியிருந்த தெல்லாம் பறந்து விட்டது. ரஷிய சக்கிரவர்த்தியா யிருந்த இரண்டாவது நிக்குலாஸ் ஆட்சிக்கு முடிவு ஏற்பட்டுவிட்டது. அக்காலத்தில் ரஷிய சக்கிரவர்த்தி ஜெர்மன் மன்னரான கெய்சருடன் அந்தரங்கமாக சதி செய்ய முடியாது போயிற்று.

### லெனின் இறுதி வெற்றி

1917-ம் வருடம் நவம்பர் மாதம் 15-ந் தேதி லெனின் தமது சோவியத் பட்டாளத்துடன் மாஸ்கோ மீது படையெடுத்துச் சென்று மாஸ்கோ நகரை ஜெயித்தார். அதன் பின் ரஷியாவில் சோவியத் ஆட்சியை நிலை நாட்டினர்.

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

# ருஷ்யச் சிறைச்சாலைகள்.

## குற்றவாளிகளை நடத்தும் முறை.

(தோழர் நவகார்)

ஒருமனிதனுக்கு நோய்கண்டால்அந்நோய் அம்மனிதனுக்குளதனால் உண்டாயிற்று என்றும், அந்நோய் அம்மனிதன் உடலில் எத்தனை தூரம் பரவியிருக்கிறதென்றும் நன்கு ஆராய்ந்து அந்நோயை முற்றும் ஒழிக்க தக்க ஔடதம் கொடுப்பவனே உண்மையான, தேர்ச்சிபெற்ற மருத்துவனாவான். அவனுடைய மருந்துகளே நோயாளிக்கு விரை சுகத்தையளிக்க வல்லது மாகும். அஃதன்றி நோய் தோன்றிய காரணத்தையும், அதன் தன்மையும் உணராது வெளிப்பூச்சினால் கொடிய வியாதியை யொழித்து விட முயற்சிக்கும் வைத்தியன் வெறும் முட்டாள் என்பதோடுமட்டுமல்ல நோயாளியை பல நாளது பைத்தியத்திற்குள்ளாக்கி அவனுக்குற்ற வியாதியும் விருத்தியாகி அவனை மரணத்திறகுள்ளாக்கி விடுவது கண்கூடு.

அஃதே போன்று தற்போது உலகில் கொலை, களவு, காமம் சூது இன்னோரன்னபல குற்றங்களில் மக்களீடுபட்டுவருகிறார்கள் என்பதுமட்டுமல்ல-அது நாளடைவில் பெருகி வருகின்றதென்பதை உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டின் அரசாங்க அறிக்கையும் வெளிப்படுத்திக் கொண்டு வருகிறது. குற்றஞ் செய்வோருக்கு எத்தனை கொடுமையான தண்டனை யீந்தாலும் அவன் திரும்ப திரும்ப அதே குற்றத்தையே செய்தும் வருகிறான்; அவனுக்கு அரசாங்கம் விதிக்கும் கொடுந்தண்டனைகளை நன்கறிந்தும் மேலும் மேலும் பல மக்கள் அதே குற்றங்களைச் செய்து கொண்டுதான் வருகிறார்கள். மக்கள் நாகரிகமுற்று அரசியலமைப்பைக் கண்ட நாளிலிருந்து இன்றுவரை, குற்றஞ் செய்தவனுக்கு கொடுந்தண்டனை விதிப்பது உலகிலுள்ள எல்லா அரசாங்கங்களும் அனுஷ்டித்து வரும் முறை. அரசாங்கம் குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனையும், கசையடி கொடுத்தாலும், அபராதம்போடுதலும், நாடுகடத்தலும் அவர்களது வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதோடு, அதைப் பார்த்து மற்றமக்களும் அதே குற்றத்தைச்செய்யாது பயந்திருக்கவேண்டுமென்பதற்கேயாகும் ஆனால் எவ்விதக் கொடுந் தண்டனை விதித்தாலும் மனிதன் குற்றஞ் செய்யாதிருக்க முடியவில்லை. எனவே குற்றஞ் செய்பனை திருத்தும் முயற்சியில் இதுவரை உலகிலுள்ள எல்லா அரசாங்கங்களும் தோல்வியுற்று விட்டது என்பது எவரும் மறுக்க முடியாத அரிய உண்மையாகும். எனவே இத்தகைய அரசாங்கங்களை நான் ஒரு மனிதனுக்குண்டாயிருக்கும் நோயையும், அதன் தன்மையையும் உணராதுமேற்போந்தவாறுவைத்தியஞ் செய்யும் ஓர் மூட வைத்தியனுக்கு ஒப்பாகக் கருதுகிறேன்.

பல விஞ்ஞானப் புலவர்களின் அபிப்பிராயப்படி எந்த மனிதனும் வேண்டுமென்றே எந்தக் குற்றத்தையும் புரிவதில்லை ஒரு சில மனிதர்கள் அவர்களது மூளைக் கோளாறுகளால் சிற்சில குற்றங்கள் புரிந்து வருகின்றார்கள் எனறாலும், நூற்றுக்கு தொன்னூற்றொன்பது குற்றவாளிகள் வேலையில்லாத் திண்டாட்டம், அறியாமை, தரித்திரம், மதுபானம் முதலியவற்றின் பயனாகவே குற்றங்களைப் புரிந்து வருகிறான். குற்றஞ் செய்வதற்கு ஆஸ்பதமான, வேலையில்லாத் திண்டாட்டம் தரித்திரம் அறியாமை முதலியவைகளைப் போக்கி விட்டால் உலகில் குற்றங்கள் குறைந்துவிடும் என்பது நிச்சயம். இவ்வுண்மைகளை உலகிலுள்ள எந்த முதலாளித்துவஆட்சியிலும்காண முடியவில்லை. ஆனால் சோவியத் ரஷ்யாவோ இவ்வரிய உண்மைகளை அறிந்து தங்கள் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் வறுமை, பேராசை, அறியாமை ஆகிய நோய்களை அடியுடன் கல்லி விட்டதனால், குற்றங்கள் நாளடைவில் குறைந்து வருகின்றன. இவை சோவியத் சர்க்காரை, நோயையும் அதன் தன்மையைத் தக்கவாறோர்ந்து தக்க ஔடத்தை இஜ்செக்ட் பண்ணும் அரிய மருத்துவனுக்கு ஒப்பிடலாம்.

ருஷ்யாவில் குற்றஞ்செய்பவனுக்குக் கொடுந் தண்டனை இல்லை. அங்கு எவ்விடத்திலும் இதைச் செய்யாதே, அதைச்செய்யாதே; அது புண்யம் இது பாவம் என்று போதிப்பதுமில்லை. மனிதனுக்கு வேண்டிய தேவை பூர்த்தியாக்கப்பட்டால் அவன்குற்றஞ் செய்ய மார்க்கமில்லை யென்று உணர்ந்து நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கு ஊண் உடை ஆகிய அவசியமான தேவைகள் கிடைக்கும்படி செய்து விட்டது. எனவே அந்நாட்டில் குற்றங்கள்குறைந்து விட்டது. அதனால் அரசாங்கத்திற்கு பெருந்தொல்லை நீங்கிவிட்டதென்பதோடு மட்டுமல்ல பெருவரியான பொருள் மீதமாகி விட்டது. ஏராளமானமக்களை ஜட்ஜ்என்றும், முனிசீப் என்றும் கலெக்டர் என்றும் போலீஸ் என்றும் ஏற்படுத்தி மக்களின் பெரும்பாலான உழைப்பலனை இவர்கள் உடல்நோவாது சோம்பேறித்தனமாயிருந்து கொண்டனுபவித்து வருஞ்செயல் ஒழிந்து போய் விட்டது. தேசத்தின் நிலங்கள் அரசாங்கத்துக்கு சொந்தமாக்கி தனிஉடைமையை ஒழித்து பொது உடைமையாகி விட்டதால், அந்நாட்டில் சிவில் விவகாரம் அறவே இல்லாது போய்விட்டது. பெண்களுக்கு தக்க உரிமையும் தக்கஉடல் பயிற்சியும்அளித்ததோடு ஆணும் பெண்ணும் தாராளமாய் கூடிப் பழகும்படி விட்டு விட்டதினாலும், ஆணும்பெண்ணும் உழைப்பாளிகளாய் மாறிவிட்டதினாலும் எல்லோருக்கும்அரசாங்கம் வேலை கொடுத்துவருவதினாலும், விபசாரம், பலாத்காரமாய் பெண்களை கறபழித்தல் முதலிய பெண்கள சம்பந்தமாய் ஏற்படும் கிரிமினல் கேஸ்கள் அறவேஒழிந்து விட்டது. மக்கள் போதிய பொருள்கள் சேமித்து வைக்க இடமின்மையாலுமே ஒருவன்திருடினாலும் அவன் அப்பொருளைக்கொண்டு எதுவும் செய்யமுடியாதபடி அரசாங்க அமைப்பு இருப்பதாலும், களவும் நாளடைவில் குறைந்து விட்டது. எனவே ரஷ்யாவில் ஜட்ஜ்கள் கலெக்டர்கள் இன்ஸ்பெக்டர் ஆகிய உத்தியோகஸ்தர்களுக்கு அந்நாட்

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க



**நாகம்மாள்.**

தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாளின் ஞாபக தினம், அடுத்தவாரத்தில் ஈரோட்டில் நடைபெறும். சுயமரியாதை சங்கத்தின் ஆதரவில் "நாகம்மாள் தினத்திற்காக" அழைப்பு அனுப்பப்படும். மாகாண முழுதுமுள்ள ௱நமதியக்கத் தோழர்கள் விஜயமாவார்கள்.

# புரட்சி

ஈரோடு 1934- ஏப்ரல் மீ 29-உ

## மே தினம்.

மேதினம், அதாவது, பிரதி வருஷத்திய மேமாதமுதல் நாளை உலகமெங்கும் உழைப்பவர்களால் பெருநாளாக கொண்டாடப்பட்டுவருகின்றது. பத்தொன்பதாம் நூற்றூண்டுக்கடைசியில், முதல் அமெரிக்க தேசத்தில், தொழிலாளர், கிருஷிகர் அடங்கிய மக்கள் 8-மணி நேரத்திற்கு மேல் தொழிற்சாலைகளிலும், வயல்களிலும், நிலங்களிலும் வேலை செய்வது அநீதி என்றும், அதனை வற்புறுத்துவது அதனினும் அநீதி என்றும், 8-மணிநேர உழைப்பே போதுமானதென்றும் ஒரு கிளர்ச்சிபுறப்பட்டது. அக்கிளர்ச்சியை முதலாளிகள் அடக்க முயன்றனர். அவ்வடக்குமுறை, மே மாதம் முதல் நாள் கொரோமாக முதிர்ந்ததன்பயனாக, எளிய தொழிலாளர், விவசாயிகளின் இரத்தம் சிந்தியபடியால், அந்நாள் தொழிலாலர்களின்மாபெரும்தியாக ஞாபகார்த்தமாகக் கொண்டு உலக முழுமையும் அத்தினத்தைக் கொண்டாடிக்கொண்டு வருகின்றூர்கள்.

தொழிலாளர் உலகில் முதலாளித்திட்டம் ஏற்பட்டது முதல், 8-மணிநேரம் மாத்திரமல்ல, அவர்கள் உழைத்து வந்தது 10-மணி நேரம், 12-மணி நேரம், 16-மணி நேரம் ஊண் உறக்கமின்றி உழைத்து வந்திருக்கின்றூர்கள். சுரங்கங்களிலும், குன்றின் மேற்களிலும், புயல் காற்றிலும் பெரும் வெள்ளத்திலும் உழைத்துவருகின்றூர்கள். தொழிலாளர்களில் முதியோர்மாத்திரமல்ல, சிறு குழந்தைகளும் தூங்கவேண்டிய இரவிலும் உழைத்து வருகின்றனர். அனுதினமும் வேகாவெய்யிலிலும், குளிரிலும் தீக்ஷண்யத்திலும், வயலிலும், பாலை வனத்திலும் உழைத்து வருகின்றவர் யார்? இவ்வளவு கஷ்டமும் தங்கள் வயற்றுக்கு மட்டிலும்தானு? மணிக்கு 100 மைல் ஓடும் எக்ஸ்பிரஸ் வண்டியில் ஆயிரக்கணக்கான பிரயாணிகளுடைய உயிர் ஒரு சிக்னல்மென் அதாவது, அடையாளம் காட்டும் ஒரு கூலிவயமிடமிருக்கின்றது! அவனைப் பன்னிரண்டு மணி நேரம் இரவில் விழித்திருக்கவேண்டுமென்றூல், இதனினும் கொடுமை எங்குளது. இவன் 8-மணி நேரம் வேலை செய்வதுதான் உசிதமென்று வாதமிட்டால், அவனை மிஷின் கன்களைக்கொண்டு கொல்லுவதென்றூல், யாரால் பொருக்கமுடியும். இத்யாதி கொடுமைகளைப்போக்கி, உலகத்தில் தொழிலாளருக்கு நியாயத்தை ஸ்தாபிக்க நேர்ந்த தினம் இந்நாளாகும்.

சென்னை புளியந் தோப்பில் பன்னீராயிரம் நெசவுத் தொழிலாளர்கள், ஐந்து மாத காலமாக பசியும் பட்டினியாயும் கிடக்க நேரிட்ட காலையில், அவர்களுக்குப்பதிலாக வேலைக்குப் போகும் கருங்காலிகளை நிறுத்த எத்தனித்த காலையில், அமைதிக்கும், ஒழுங்குக்கும் ஏற்பட்டுள்ள அதிகாரிகள், தொழிலாளர் எழுவரைச் சுட்டுக் கொன்றனர்!! இத்தியாகத்தைக் கொண்டாடும் தினமும் மேதினமாகும்.

1905ம் வருஷத்தில் வீணாக ஜப்பானியர் மேல் படையெடுத்த ஜார் சக்கிரவர்த்தியின் கொடுமையைத் தடுக்க முயன்ற ரஷியத் தொழிலாளிகள், பதினுயிரக் கணக்காக கொல்லப்பட்ட ஞாபக தினமும் இத்தினமாகும்.

பிரான்சு தேசம் புரட்சிககு பின்பு பிரான்சு நாட்டில், அநீதியும் கொடுமையும் மிகுந்து வந்தபடியால், பிரான்சு தேசத் தொழிலாளிகளும், விவசாயிகளும் ஒன்று சேர்ந்து, பாரீஸ் நகரத்தில் ஏகாதிபத்திய ஆட்சியை, நீகம்யூன் என்ற, உழைப்பவர்களாட்சியை ஸ்தாபித்த காலை, முதலாளிகளுடைய தந்திரத்தால் கொல்லப்பட்டலட்சக்கணக்கான பிரான்சுத் தொழிலாளர்களுடைய ஞாபகத்தைக்குறிக்கும் தினம் இம் மேதினமாகும்.

ஆங்கில நாட்டினும், நிலவரியிலும், நிலங்களை இழந்ததாலும் மனம் பொருத தொழிலாளர்கள் சார்ட்டிஸ்ட் என்ற இயக்கத்தைக் கிளப்பியதன் காரணமாக, அக்கூட்டத்தைச் சேர்ந்த அனைவரையும் நாசப்படுத்திய ஞாபகப்படுத்தப்படும் தினம் இத்தினமாகும்.

சீன நாட்டில், சன்யாட்சன் என்ற பெரியோர் ஸ்தாபித்த தேசியத்தை, அபிவிர்த்தி செய்ய ஏற்பட்ட தொழிற்கட்சியை நாசமாக்கிய ஞாபக தினமும் இதுவாகும்.

நேற்று தென் இந்திய ரயில்வேயில் முப்பதினுயிரம் பேர்கள் வேலைநிறுத்திய காலையில், அவர்களின்தலைவர்கள் நிரபராதிகளாகிய பதினெட்டு பேரை, பத்துவருஷம் சிரைவாசம் ாிட்ட ஞாபகதினமும் இத்தினமாகும். இவ்விதமாக உலக முழுமையும் அந்தந்த நாடுகளின் தொழிலாலர் இயக்கங்கள் தோன்றிய நாள் முதல், பல்லாயிரக்கணக்காக கஷ்டப்பட்டு மாண்டு மடிந்த உழைப்போர்களுடைய தியாகத்தை ஞாபகார்த்தமாக கொண்டாட இத்தினம் ஏற்பட்டுள்ளது.

உலகில் உயிர் முளைத்தகால முதல், கஷ்டமும் தியாகமும் அவ்வுயிர்களுடன் கலந்தேயிருக்கின்றன. இது பிரபஞ்சவாழ்க்கையிலொன்றுகும். கஷ்டமில்லாமல் தியாகமில்லாமல் ஒன்றும் கைகூடுவதாகவில்லை. உலகத்தின்மேல் நடப்பது, பெரும்பான்மை மக்களுக்கு முள் கம்பளத்தின்மேல் நடப்பதைப் போல் ஒத்திருக்கின்றது. முள்கம்பளத்தின்மேல் நடக்க யாருக்குத்தான் மனம்வரும்? ஆனல் அக்கம்பளத்தின்மேல் நடந்தால்தான், சுகப்பேற்றையடைய முடிகின்றது. இதைத்தான், தொழிலாளர் இயக்கத்துக்கு ஆசானுகிய காரல் மார்க்ஸ் என்பார், லோகாயுதத்தின் முரண் என்பார். கஷ்டமில்லாமல் சுகமில்லை. சுகமும் கஷ்டமில்லாமல் கிடைப்பதில்லை. இதுதான் சமதர்மதத்துவத்தின் முரண்பாடு. பொது உடைமைக்காரர் யாராகிலும், இந்தப்பிரபஞ்ச முரண்பாட்டை அலட்சியம் செய்யமுடியாது. சோஷலிஸ்ட் அனைவரும், இந்த பிரபஞ்ச முரண்பாட்டை அடிப்படையாக வைத்து, தங்கள் தத்துவத்தைக்கட்டவேண்டும். சுதந்திரம்வேண்டுமானுலும், ஸகோதர தத்துவம் வேண்டுமானுலும், சரிசமதத்துவம் வேண்டுமானுலும், தியாகத்தால்தான் அடையமுடியும்.

உடலுக்கு உணவு வேண்டுமானல், அறிவுக்கு கல்விவேண்டுமானல், தியாகம் அன்னியில் எதையுமடைய முடியாது! சுகம், துக்கம்; துக்கம், சுகம் வாழ்வில் பிணைகொண்டிருக்கிறபடியால், தியாகமூர்த்திகள் செய்துவரும் தியாகம், உலக ஞாபகத்தில் இருந்துகொண்டேயிருக்கும். இவ்விததியாகமூர்த்திகளின் ஞாபகத்தைக் கொண்டாடும்தினம் இந்த மே மாதம் முதல் தேதியாகும்.

இந்த மேதினஞாபகம் ஏகாதிபத்திய ஆட்சிக்கல்ல, செல்வத்திற்கும் சம்பத்திற்குமல்ல, கொடுங்கோன்மைக்குமல்ல, உலகமக்களனைவரும் உண்டு உடுக்கவும், இருந்து வாழவும், சந்ததிவிருத்தி செய்யவும், அந்த சந்ததியார் உலக சுகப்பேற்றை பெறவும் செய்யும் தியாகமாகும்.

தற்போது உலகம் பலவித இடுக்கண்களால் கஷ்டப்பட்டு வருகின்றது. இல்லாமையும் வறுமையும், பஞ்சமும், வெள்ளமும் உலகை ஒருபுறம் வருத்திவர, கொடுங்கோன்மைக் கட்சிகளாலும், முதலாளிகளின் அட்டூழியத்தாலும், வறுசமையாலும், உலக நெருக்கடி அதிகரிக்கும்போலும்! உலகம் பிற்போக்கால்திரொம்பவும்கஷ்டப்படவேண்டியதுவரும் போலும்!! உலக நெருக்கடி குறைந்தபாடில்லை. சேனைத் தளங்கள் உலகில அதிகரித்து வருகின்றன. மகாயுத்தத்தின் முன்னிருந்த சேனைத்தளங்களைவிட எண்மடங்கதிகரித்திருக்கின்றன. இத்யாதி வியர்த்தங்களால் உலகமக்கள் இனிவரும் மாபெரும் யுத்தத்தில் மடியப் போகின்றனர். இனிவரும் யுத்தம் உலகில் வீண்பொருள் போதாதென்பதற்கல்ல. செய்பொருள் செய்ய முடியவில்லையென்பதற்கல்ல வல்லரசுகளின் ஆணவத்தாலும் அகம்பாவத்தாலும் விளையப் போகும் மகா பாதகமென அறிக!!! இம்மா பெருங்கேட்டை தடுப்பதற்கு உலகில் ஒருவரேயுளர். அவர்களால்தான், ரஷ்ய தேசம்,புரட்சிக்குப் பின் நடந்த உள்நாட்டுக் கலகம், அடக்கப்பட்டது. வெளிநாடுகளின் உதவி பயன்படாமல்போயிற்று. போலண்ட் தேசத்து நெருக்கடியைச் சாக்காக வைத்துக்கொண்டு வல்லரசுகள் சோவியத் அரசை நசுக்கச்செய்த முயற்சி வீணைதாயிற்று. இவர்கள் யாரெனில் அகில இந்தியத் தொழிலாளர்களாவர். இவர்கள்

தான் உலக சமாதானத்தை நிலைக்க வைக் வலிமைகொண்டவர். இவர்கள்தான் அகில உலகப்போரை நிறுத்தவல்லவர். இவர்களுக்கு வேண்டியதொன்றே. அதாவது, அகில உலகத்தோழர்கள் ஒற்றுமைப்பட்டு சுகத்திலும், துக்கத்திலும் ஒன்றுபட்டு வாழவேண்டியதொன்றே. இந்த ஒற்றுமைக்காக உலகத் தொழிலாளர் பல்லாண்டுதோறும் பட்ட கஷ்டநிஷ்டூரங்களையெல்லாம் ஞாபகப்படுத்தும் தினம், மே மாதம் முதல் தேதியாகும்.

———

## பம்பாயில் பயங்கர வேலைநிறுத்தம்.

உலக முழுவதும் தொழிலாளர் நிலைமை படுமோசம் இந்தியாவிலோ சொல்லவேண்டியதில்லை. எண்ணெய்க் கொப்பரையில் வெந்துகொண்டிருக்கிறார்கள் தொழிலாளிகள். பொருளாதார நெருக்கடி சிலகாலமாக மனிதவர்க்கத்தை இறுகப் பிடித்து உலுக்கி வருகிறது. கல்னெஞ்ச முதலாளிகள் ஈவிரக்கமின்றிச் சம்பளக் குறைப்பால் தொழிலாளிகளை உயிரோடு உடம்பை உரிக்கும் சித்திரவதை செய்து வருகிறார்கள். இன்றைய இந்தியத் தொழிலாளர் வாழ்வோ அழுவாரற்ற பிணமாகவும், சீந்துவாரற்ற சவமாகவுங் கிடக்கிறது. கடந்த ஒருவாரமாய்ச் சம்பளத்தைக் குறைத்ததினால் பம்பாய்த் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். பம்பாய் ஆலைகள் 57-ல் 43 ஆலைகள் மூடப்பட்டுவிட்டன 8 ஆலைகள் மாத்திரம் திண்டாட்டத்தின்பேரில் வேலைநடத்திவருகின்றன. 80 ஆயிரம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். பம்பாயில் துப்பாக்கிப் பிரயோகமும், அடிதடிகளும், கல்வீச்சும் நடந்தமயமாயிருக்கிறது. உயிர்ச்சேதமும், படுகாயமும் கோரக்காட்சியளிக்கிறது. பம்பாய் அமளிகுமளியால்க் கிடக்கிறது

பொறுப்புவாய்ந்த இந்திய சர்க்கார் தொழிலாளிகளை அனைதைக் குழந்லைகளாய்ப் பாவித்துக் கை விட்டுவட்டதாகத் தெரிகிறது. யதேச்சாதிகாரிகளான ஹிட்லரும், முசோலினியுங்கூட தொழிலாளிகளைக் கௌரவித்து ஒக்தாசை புரியும் நிர்ப்பந்தத்திலிருக்கும் இக்காள் ஜனநாயகத்துவத்தை நீட்டி நீட்டிப் பேசும் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியான இந்திய சர்க்கார் பம்பாய்த் தொழிலாளிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைக் கவனியாது தூங்கிக் கொண்டிருப்பது மானக் கேடாகும். தன் கையே ஆபத்துக்குதவும் என்று தொழிலாளிகளுக்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறோம். தொழிலாளர் தலைவர்கள் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு தொழிலாளர் சங்கங்களை பெயரளவிலன்றி உண்மையாகவே பலப்படுத்தி சக்தியைப் பெருக்க வேண்டிக்கொள்கிறோம். பம்பாய்த் தொழிலாளருக்கு ஆதரவு காட்டும்பொருட்டு 6500 பேர் டில்லியில் வேலைநிறுத்தம் செதிருக்கிறார்கள். நாகபுரியிலும் மே 1-ந் தேதி வேலைநிறுத்தம் ஆரம்பமாகுமென்று தெரியவருகிறது. தென்னாட்டுத் தொழிலாளிகளும், சமதர்மிகளும் பம்பாய்த் தோழர்களுக்கு ஆதாவு காட்டுந் தோரணையில் மேதினத்தன்று தீர்மானங்கள் நிறைவேற்றி ஆவன செய்யக் கோறுகிறோம்.

———

## பகுத்தறிவு

நமது பகுத்தறிவு தினசரியானது நாம் எதிர்பார்த்ததுக்கு அதிகம் வளர்ச்சியடைந்து வருகிறது. நேற்றுடன் ஒவ்வொரு நாளும் 3200 காப்பிகள் வெளிவந்து தமிழ்நாட்டில் நமதியக்க சம்பந்தமாக உள்ள சகல செய்திகளும் பிரதி தினமும் தாராளமாக வெளிவர வேண்டுமென்பதற்காகவே இத்தினசரி ஆரம்பிக்கப்பட்டது. தினசரி தனது கடமையை தைரியமாகச் செய்ய ஊக்கம் காட்டிய வெளியூர் சந்தாதார்களையும் ஏஜண்டுகளையும் பாராட்டுகிறோம். மூவாயிரத்து இருநூறாக இருப்பது இன்னும் அதிக மாகாததற்கு காரணம் சந்தா அனுப்பாத சந்தாதார்களுக்கும் முன் பணம் அனுப்பாத ஏஜண்டுகளுக்கும் நாம் பத்திரிகை அனுப்பாததேயாகும். இன்னும் இரண்டு தினத்துக்குள் சேலம், திருச்சி, திருப்பத்தூர், பொள்ளாச்சி, கோவை இவ்வூர் ஏஜண்டுகள் கேட்டுக்கொண்டபடியால் அன்றாடம் பேப்பர் மாலைக்குள் கிடைக்கும்படி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

## காளியப்பன்.

நாகை தோழர் காளியப்பன் அவர்கள் மலாய் நாடு சுற்றுப் பிரயாணம் இவ்வாரமில்லை. இன்னும் இரண்டுவாரத்திற்குள் அவர் மலாய் நாட்டிற்குப் புறப்படுவார்.

தோழர் காளியப்பனின் "டார்வின்" என்ற குழந்தை இறந்ததென்று தெரிய விசனிக்கிறோம். குழந்தையை இழந்த வருத்தத்திலுள்ள அவருக்கு ஆறுதல் கூறுகிறோம். அடுத்தவாரம் ஈரோட்டிற்கு வருவார்.

———

## தொழிலாளர்.

மாமூல் சம்பளத்தில் பாதிக்குக் குறைவாக குறைப்பதை பம்பாய் நெசவு ஆலைத் தொழிலாளர்கள் கண்டிக்கிறார்கள். இதற்கறிகுறியாகவே ஒருமாத நோட்டீஸ் கொடுத்து நேற்று 23 ந் தேதியிலிருந்து இன்றுடன் ஏழு தினங்கள் பொது வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஆரப்பத்தில் வேலைநிறுத்தக்காரர்களின் எண்ணிக்கை மூன்று ஆயிரமேயாகும். இன்றுவரை சுமார் ஒரு லக்ஷத்துக்கு மேல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்திருக்கிறார்கள். பல தலைவர்கள் கைதிசெய்யப்பட்டும்இதுவரையில் முதலாளிகளோ சர்க்காரோ சமாதானம் செய்ய முன்வரவில்லை. பம்பாய் கார்ப்பரேஷன் தலைவர் இன்று சமாதானத்துக்கு முயல்கிறார். டெல்லியிலும், நாகபுரியிலும், கராச்சியிலும் உள்ளநெசவுத் தொழிலாளிகள் அனுதாபங் காட்டுகிறார்கள். விரைவில் பரிகாரம் ஒரு முடிவேற்படுமா?

———

## சென்னை கார்பரேஷனில் படைஎடுப்பா?

சென்னையில் மேமாதம் கடைசி வாரத்தில் நடக்கும் கார்பரேஷன் கூட்டத்தன்று, சென்னையில் வேலை யற்று பசிபட்டினியால் வருந்தி வாடும்தொழிலாளர்களின் கூட்டம் ஒன்று திரண்டு சென்று சென்னை கார்பரேஷன் கட்டிடவாயிலில் முற்றுகை யிடுமென்று இன்று ஓர் செய்திகிடைத்திருக்கிறதுஇது வாஸ்தவமானால் எந்த எண்ணத்துடன் இது ஆரம்பிக்கப்பட்டபோதிலும் இதை வரவேற்கிறோம்.

இம்மாகாணத்தின் தலைநகரான சென்னையில் "உயர்தர படிப்பு" படித்தவர்கள் மட்டும் வேலையில்லாது 2400க்குஅதிகம்இருப்பதாகவும்,இவையன்றி, தங்கூடமோ செய்ய வேலையோ இல்லாது, எச்சல் இலைசோற்றை தின்று விட்டு டிராம் வேலையன் களிலும் வால்டோக்ஸ்ரோட்டிலும், சாக்கடை ஓரங்களிலும் படுத்துறங்கி காலம் கழிப்போர் 8000க்கு அதிகம் இருப்பதாகவும், இவைகளன்றிமாமூல் தொழிலற்றதோழர்களுமுண்டு உணர்ந்தவர்களுக்கு இச்செய்தி ஆச்சர்யத்தைக்கொடுப்பதிற்கில்லை.

ஆனால் இந்த வேலையற்ற தொழிலாளிகளை திரட்ட முயலுகிறவர்கள் பெயரை கேட்டே சிறிது கவலைபடுகிறோம் தான் ஏழைகளின் தாதா! என்று பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திக்கொண்டு ஏமாந்தவர்களை உனக்கு விரோதமாக தூண்டி விடுவேன் என்று முதலாளிமாரை பயமுறுத்தி, இத் தொல்லையில் இருந்து தப்ப விரும்பும்முதலாளிகளிடம் பணம் பெற்று தங்கள் பெண்டு பிள்ளைகளுடன், சுகமாக வாழும் தலைவர்கள் சென்னையில் பலர் உண்டு. அவர்கள் சொன்னதை நம்பிச் சென்று உதையும் அடியும் பெற்று திருப்பிய, திரும்பும் தொழிலாளிகளும் பலருண்டு. இத்தகைய கூட்டங்களிலெதும் இக் கார்ப்பரேஷன் முற்றுகையில் தலையிடாது இருப்பார்களேயானால்; இப்பட்டினிப்போர் சிறிது பலனை அடையக்கூடும்.

சென்னை கார்ப்பரேஷன் தோழர் சத்திய மூர்த்திக்கும், தோழர் வெங்கட்டரும சாஸ்திரிக்கும், சொந்தமாக இருப்பது போல் அதன் சில நடவடிக்கைகளிலிருந்து உணர இடமிருக்கிறது மீண்டும் பார்ப்பன ஆக்ஷியை கார்ப்பரேஷனில்நிலைக்கச்செய்யவும்சென்னை கார்ப்பரேஷன்கமிஷனராக ஓர் பார்ப்பனரைக் கொண்டு வரச்செய்யப்படும் முயற்சிகளுக்கு உதவியாகஇக்கிளர்சசிஇருக்காதென எண்ணுகிறோம்.

பம்பாய் கார்ப்பரேஷன் தலைவர் வேலையற்றோர் பிரச்சினையை தீர்க்க சிறிது உதவி செய்ய ஏற்பாடுகள் செய்வதை அறிவீர்கள் நமது சென்னை கார்ப்பரேஷன் தலைவரும், தனது கடமையைச் செய்ய தவறார் என்றே எண்ணுகிறோம்.

# தொழிலாளர் எழுச்சி.

(காம்ரேட்)

(இரும்புப் பெட்டியிலே என்ற மெட்டு)

கோடிக்கால் பூதமடா—தொழிலாளிக்
கோபத்தின் ரூபமடா!
காடி யெழுந்ததுபார்—குவலயம்
காற்றிசையும் அதிர
தேடிய தேகமொன்றே—நடைநெஞ்சு
தீப் பொறிப் பார்வையொன்றே
சாடிக் குதித்து முன்னே—முன்னேறித்
தாவியே செல்வதைப்பார்

வெந்துபுகைந்துருகும்—தொழிற்சாலை
சந்துகள் இருட்குகை
பொந்துகளிலிருந்தே—தொழிலாளிப்
பூதம் புறப்பட்டதும்
நைந்து நொறுங்கினவே—சங்கிலிகள்
நாலாயிரம் வருஷம்
வந்த பழங் கட்டுகள்—பொடிபட்டு
மண்ணில் புதைபட்டதே

செங்கொடிதான்பரப்பி—புதுமன்னன்
தெருக்களில் புகுந்தான்
தங்கரத்தின் வலிமை—காட்டுதற்குச்
சடுதியில் முனைந்தான்
எங்கும் முறிந்தனவே—முதலாளி
ஈனர் எலும்புகளே
பொங்கும் இடிமுழக்கி—தொழிலாளிப்
பூத முரைத்ததிவை:-

"யாவும் எனதுடமை—புவிமிசை
யாவும் எனக்குரிமை
ஜீவப் பொருளுணவு—பானம் உடை
தெருக்கள் மாளிகைகள்
கோவில்கள் கோபுரங்கள்—பாங்குபொருள்
கூட்டுங் களஞ்சியங்கள்
காவியம் ஓவியங்கள்—பூந்தோட்டம்
கனிகள் நாணயங்கள்

புத்தகசாலையுடன்—கல்லூரிகள்
புது நாடகமேடை
நத்து வண்டிவாகனம்—ம்யூசியங்கள்
நாவாயுடன் பலவும்
இத் தரைமீதினிலே—இனிமேல்
யாவும் எனதுடமை"
சத்தம் வெடித்ததுகேள்—தோழனே!
சமதர்ம உலகில்.

## கடலில்

சென்ற வாரம், அந்தோணி ஸேவியர் என்ற மூன்றாவது வகுப்பு படிக்கும் மாணவன், பட்டம் விட்டானும் பட்டத்தின் கயிறு அறுந்து விட்டதால் அதை பிடிக்க ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே பையன் சென்று கடலில் விழ்ந்து தத்தளித்தானும், முடிவில் வயிறு நிறையதண்ணீர் குடித்து இறந்தானும் செம்படவர்கள் சென்று பிரேதத்தை எடுத்து வந்தார்களாம்.

## காங்கிரஸ்.

காங்கிரஸ்காரியக்கமிட்டியும் அகிலஇந்தியக்காங்கிரஸ் கமிட்டியும் மே ௴ 18, 19ந்தேதிகளில் தான், பாட்னுவில் நடைபெறுமாம். அதற்கு முன்பு 2ந்தேதி ராஞ்சியில் அகில இந்திய சுயராஜ்யக் கக்ஷி கூட்டம் நடைபெறும் என்று தெரிகிறது. இவ்விரண்டு கூட்டங்களின் ஆரம்பவேகம் தடைபெற்று விட்டாலும் கூட்டங்கள் என்னமோ, நடைபெறும். காந்தி சொன்னபடி சட்டசபை பிரவேசமும், சட்ட மறுப்பு நிறுத்தத்தீர்மானமும் முதலில் நடைபெறும். எதிர்காலத்தில் இவர்கள் வேலைதிட்டம் என்ன என்பதை கமிட்டி முறையே வெளியிட்டு விடும். கமிட்டி கூடும் தேதிகளில் சில தலைவர்கள் அபிப்பிராயப்பேதப்படுவது போலவே, கமிட்டிகளின் வேலைத்திட்டம் தயாரிப்பதில் அபிப்பிராய பேதமிருக்கிறது. புது திட்டம் என்ன சொல்லப்போகிறது என்பதை பார்ப்போம்.

## எப்போ

அடிமையென்றும் ஆரியனென்றும் அகலவைத்து ஆண்டுவரும் ஆண்மைகொண்ட அர்ப்பப்பயல்களின் அகம்பாவங்கள் அடியோடொழியும் அன்னாள் வருவதெப்போ?

பெண்களெல்லாம் பேதையென்றும், பிள்ளைபெறும்பிண்டமென்றும் பின்புத்திக்காரரென்றும் பிராணன்போக மித்துதரும்பிறவியென்றும் பிராணிகள் போல் மிதற்றிவரும் பிரகஸ்பதிகளின் பேடித்தனம் பிணமாகும் காலமெப்போ?

கடவுளென்றும், கத்தரென்றும் காரணமற்ற பெயரைக்காட்டி கஞ்சிக்குக் காற்றாய் பறக்கும் கபடமற்றவர்களினின் காசைப்பறித்து காலாட்டி சோறுதின்னும் கயவர்களின் காசில் இடிகள் மின்னலோடு விழ, காலம் வருவதெப்போ?

உன் உடமை என்னுடமையென்று கன்னத்திலடித்து மண்ணில் பிறந்த மானிடனை கண் தெரியாமல் சின்னபின்னமாகப்பின்னப்படுத்தி வரும் காசுத் திமிர் கொண்ட கடுங்கோலனை சின்னப்படுத்தி மண்ணிலுள்ள எப்பொருளும் எல்லாருடையதே என்ற சப்தம் எங்கும் தொனிக்கும் காலம் வருவதெப்போ?

## ராமச்சந்திர ரெட்டியார், வெற்றி.

ஜோலார்பேட்டைக்கடுத்த களரூர் தோழர் ராமச்சந்திர ரெட்டியார் வகையறுவில் கோபால் செட்டியாரை அடித்ததாகப் போலீஸார் தொடர்ந்திருந்த வழக்கில் திருப்பத்தூர் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் எதிரிகள் ஆறுபேருக்கு மொத்தம் ரூ. 550 அபராதம் விதிக்கப்பட்டது. தோழர் ராமச்சந்திர செட்டியார் சப் கலக்டர் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதின் பேரில் 26-4-34ந் தேதி ஷை ராமச்சந்திர ரெட்டி வகையறு குற்றவாளிகளல்லவென்று மொத்த அபராத தொகையும் தள்ளிவிடப்பட்டது.

(நமது நிருபர்)

---

**மார்க்ஸூம் லெனினும் காட்டிய வழியில் தீர்க்கமாயுழைக்கத் தோழர்காள் வருக!**

---

(9ம் பக்கத்தொடர்ச்சி)

டிலே தேவையே இல்லாது போய்விட்டது. எனவே அங்கு அதிகமாய் வக்கீல் களுக்குங்கூட இடமில்லை. ரஷ்யாவில் உள்ள சட்டபுத்தகம்சுமார் 100, 120 பக்கங்களேகொண்டது. அதைத்தொழிலாளி மக்களால் தேர்ந்தெடுக்கும் ஒருசில பஞ்சாயத்து மெம்பர்களே படித்து குற்றவாளிக்கு தண்டனை யியற்று வருகிறார்கள்.

இப்பொழுது ரஷியாவில் ஒரு ஒருசிலபோலீஸ்காரர்கள் இருப்பதெல்லாம் ரோடுகளில் வண்டிகள் சரியாக போகும்படி கைகாட்டி மரம்போல் நிற்கவும்; ராஜாங்கத்திற்கு விரோதமாய் சதியாலோசனை பண்ணுகிறவர்களை கண்டு பிடிக்கவும், பேராசையிலோ சோம்பேறித்தனத்தாலோ ஒரு சிலமக்கள் யாராவது திருடுதலோ, அன்றிவேறு சில குற்றங்களோ செய்தாலும், பொது ஜனங்களிடம்எவராவது மதப்பிரசாரஞ்செய்தாலும் அவர்களைப் பிடித்து தண்டனையடையச் செய்யவே போலீஸ்காரர்கள் சிலர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்போலீஸ்காரர்கள்

தாங்கள் பொது ஜனங்களின்
ஊழியர்கள் என்பதை எப்பொழு
தும் மறவாது பொது ஜனங்களி
டம் அன்புடனும் மரியாதையுட
னும் நடந்து கொள்வார்கள்.

ருஷ்யாவில் "கைதி" என்ற
வார்த்தைக்குப்பதிலாக "அடை
த்துவைக்கப்படுவோர்" என்றவார்
த்தையும், தண்டனை என்றவார்த்
தைக்குப்பதிலாக சமூகப்பாது கா
ப்பு முறை என்ற வார்த்தையும்,
குற்றம் என்னும் வார்த்தைக்கு
பதிலாக சமூகத்திற்குத் தீங்கு
விளைக்கும் செயல்கள் என்றவார்
த்தையும் உபயோகிக்கப்படுகின்
றன. கைதி என்றால் இழிவுடைய
வன் என்று குற்றவாளியோ மற்
றவர்களோ எண்ணுதிருக்கும்படி
யே இத்தைய பதங்கள் உபயோ
கிக்கப்படுகின்றன.

ரஷ்யச் சிறைச்சாலை மிக வேடி
க்கையானது கைதிகளை ஏனைய நா
ட்டு சிறைச்சாலைகளைப் போன்று
பெரிய இருப்புக்கதவுகளையுடைய
அறையில் அடைத்து அவர்களை
சோம்பேறியாயிருக்க விடுவதில்லை
கைதிகள்வெளியிலிருப்பது போல்
சிறையில் வசதியான அறையிலே
சௌகரியமாய் வாசம்செய்யலாம்
ரஷ்யாவிலுள்ள ஏனைய மக்களைப்
போல் சிறையிலுள்ள அவன் தொ
ழிற்சாலையிலுள்ள சிறைச்சாலையில்
வேலை செய்ய வேண்டும். ஆனால்
கைதிகளுக்கு மற்ற தொழிற்
சாலைகளில் வேலைசெய்யும் தொழி
லாளிக்கு கிடைக்கும் சம்பளத்
தைவிட கொஞ்சம் குறைவான
சம்பளம் கிடைக்கும் கைதிகள்
அவசியமான சந்தர்ப்பங்களில் சி
றைச்சாலை அதிகாரிகளின் அனும
தியின்மீதோ லீவ் மீதோசினிமாவி
ற்கோ டிராமாவிற்கோ அன்றி த
னது மனைவி மக்களை பார்க்க வீட்
டிற்குச் சென்றுவரலாம். அவ்வா
று செல்பவர்கள் எவரும் திரும்ப
ச்சிறைச்சாலைக்கு வராது தப்பித்
துச்செல்ல முயற்சிப்பதில்லை. அவ்
வாறு முயற்ச்சிப்பவனுக்கு எங்கு
போயினும் உணவு பெற முடியா
து. எனவே தனதுவிடுமுறைநாட்
கள் முடிந்ததும் கைதிகள் எவரும்
ஒளிந்துகொள்ளத் துணியார்.

மேலும் ரஷ்யச் சிறைச்சாலை
கைதிகளுக்கு போல்ஷ
விக் ஆட்சி முறையும் அதன் அ
மைப்பு முறைகளையும்பற்றி ஞான
த்தைச் செவ்வையாய் ஊட்டப்ப
டுகின்றன ஆகையால் அங்கு ஒரு
முறைதண்டிக்கப்பட்ட குற்றவா
ளிகளில் நூற்றுக்குதொண்ணூறு
பேர் திரும்பவும் குற்றஞ்செய்து
தண்டிககப்படுவதில்லை குற்றவாளி
கள் எவறும் பத்து ஆண்டுகளுக்
குமேல் தண்டிக்கப்படுவதில்லை.
சிறைச்சாலையில் பத்திரிகைகளும்
புத்தகங்களும் கிடைப்பதோடு
ரேடியோவும் வைக்கப்பட்டிருக்
கிறது.

சிறைச்சாலைகளில் கைதிகளை
நல்ல தொழிலாளராக்கி அவர்களை
நல்ல போல்ஷ்விக்கர்களாக்கு வத
ற்கு சிறைச்சாலைகளில் பல
தொழிற்சாலைகள் விவசா
யம செய்யத்தக்க ஏராளமான
நிலங்களுமிருக்கின்றன. ஒவ்
வொரு காராகிருகத்திலும்
(சிறையிலும்) கைதிகளின்
மேற்பார்வைக்கு உட்பட்ட
ஐக்கிய நாணயச்சங்கம் அமைக்
கப்பட்டிருக்கிறது. இந்த சங்
கத்தின் மூலம் சமான்கள் சகா
யமான விலைக்கு விற்கப்படுகி
றது. கைதிகள் தங்கள் லாப
க்கணக்கில பற்று எழுதிக்
கொண்டு சாமான்கள் கடனு
கப் பெற்றுக் கொள்ளலாம்.
கைதிகள் எவரும் தீராவியாதி
யினால் துன்புற்றால் அவர்களின்
தண்டனைகாலம் பூர்த்தியடை
ந்தாலும் அடையா விட்டா
லும் அவர்கள் கண்யமாய் விடு
தலை செய்யப்படுகின்றார்கள்.

ருஷ்யாவில் சிறைச்சினி
மாக்களிருக்கின்றன. 1927-ல்
325-சிறைப்பள்ளிக் கூடங்களி
ருந்திருக்கின்றன. 800- ஆசி
ரியர்களும் 1000-கைதித்தலை
வர்களும் கைதிகளுக்கு சமத
ர்மபபாடம் கற்பிக்கின்றனர்.
நிரக்ஷர குட்சிகளான 13,000
பேர் கல்வியறிவைப்பெற்றுள்
ளார். பல கைதிகள் புதிய
கைத்தொழில்களையும் விஞ்ஞா
னமுறைகளையும் கூடப்பயின்று
ள்ளார்கள். ருஷ்யச்சிறைச்சா
லைகளில் மட்டும் ரேடியோச்
செய்திகளை வெளிப்படுத்தும்
இயந்திரங்கள் 10,000 இருக்
கின்றன. கைதிகளுக்குள்ளே
யே எந்தப்பாஷைகளிலும் கடி
தப்போக்கு வரத்துச்செய்ய
அனுமதியளிக்கப் பட்டிருக்கி
றது. ஒரு கைதியே சிறைச்சா
லையிலுள்ள ஏனைய கைதிகளு
க்கு தபால்பட்டுவாடா செய்
யும் தபாற்சேவகனைஏற்படுத்த
ப்பட்டிருக்கிறான்.

கைதிகள் தாம் விரும்பும்
எந்த விதமான உடையும் அணி
ந்து கொள்ளலாம். சுருட்டு
பீடி குடிக்கத்தாராளமாய்
அனுமதிக்கப்படுகிறது. சிறை
ச்சாலைகளில் கைதிகளின் உற
வினர்கள் தாராளமாய்ச்
சென்று பேசிவர அனுமதிக்கப்
படுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டிலும் ரஷ்
யாவில் குற்றம் நடை
பெறுங் குற்றங் களை
யும் அதை ஒழிக்கும் முறை
களையும் ஆராய்ந்து ரஷ்யாவில்
குற்றங்கள் நிகழ்வதைக் குறை
ப்பதற்கென்று அரசாங்கத்தா
ரால் பெரிய நிபுணர்களை நியமி
த்துள்ளார்கள். அந்நிபுணர்க
ளின் அரிய முயற்சியால் ரஷ்
யாவில்நடைபெறுவது குறைந்
து வருகின்றது. குற்றவாளிகள்
ரஷ்ய சோவியத் ஆட்சிகளுத்
தன் உயிரையும் அர்ப்பணம்
செய்யும் ஒரு நல்ல கம்யூனிஸ்ட்
ஆக சிறைச்சாலையின் மூலமாக
மாற்றப்பட்டு ஒவ்வொரு கைதி
யும் நல்வாழ்க்கை பெற்று வரு
கிறார்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சோவியத் ஆட்சி ஏற்பட்டதினத்
தன்று லெனின் பேசியபோது
குறிப்பிட்டதாவது:—

நாம் நமது இயக்கத்தை வெற்
றியுடன் நடத்தி சித்தி பெற்றோம்.
நமது வெற்றி நமக்கு அதிகாரத்
தைக் கொடுத்திருக்கிறது. இவ்
வதிகாரத்தைக் கொண்டு நசுக்கப்
பட்ட நமது சகோதரர்களுக்கு
சுகத்தைக் கொடுக்கவேண்டும்.
அவர்கள் சுதந்திரமாக ஜீவிக்கவும்
சமுதாய பொருளாதார விஷயத்
தில் அவர்களுக்கு உதவிசெய்யவு
ம்நாம் வேலை செய்துவரவேண்டும்

## உலக இயக்கம்

ரஷிய தொழிலாளர்இயக்கமும்
லெனின் வெற்றியும் உலகிலுள்ள
இதர தொழிலாளிகளின் கண்க
ளைத் திறந்தன ஆகவே பல விடங்
களில் தொழிலாளர் இயக்கம் ஆர
ம்பித்தன. விசேஷமாக ஐரோப்
பாவிலும் குறிப்பாக ஜெர்மனியி
லும் தொழிலாளர் கிளர்ச்சி அதி
க மும்முரமாக நடந்தது 1918
வருடம் ஜெர்மன் தொழிலாளர்
மும்முரமாகக் கிளர்ச்சி செய்தும்
அவர்கள் முயற்சி ரஷிய தொழி
லாளர் கிளர்ச்சியைப் போன்று
வெற்றி யளிக்கவில்லை.

## ரஷிய மன்னர் கொலை

1918-ம் வருடம் ஜூலைமாதம்
16-ந் தேதி ரஷிய சக்கரவர்த்தி இ
ரண்டாவது நிக்குலாசுக்குக் கொ
லைத்தண்டனை விதித்தனர். இவர்
கொலையுடன் ரஷியாவில் அரசர்
ஆட்சிஒழிந்து சோவியத் கட்சிய
ரான தொழிலாளர் குடியாட்சி
ஏற்பட்டது அன்றே அங்கு முத
லாளிகள் அட்டகாசங்களும் நில
ச்சுவான்தார் ஆணவமும் அடங்கி
யது ரஷியா சமுதாயம் பொருளா
தாரம் ராஜியம் ,கைத்தொழில் மு
தலிய துறைகளில் அபிவி
ருத்தி யடைந்தது. லெ
னின் தலைமையில் ரஷ்யா முன்
னேறியது. அக்காலத்தில் ரஷ்யா
வில் எழுதப்படிக்கத் தெரிந்தவா
கள் சொற்பம் ரஷியாயில் பாமர
ஜனங்கள் கல்வி விஷயத்தில் அர
சர்கள் அடியோடு கவனஞ்செலு
த்தவில்லை. சோவியத் சர்க்கார்
கல்விவிஷயத்தில்பெரிதும்கவனஞ்
செலுத்தி வந்தார்கள். தற்போழு
து ரஷியா கல்வியில் சிறந்து விள
ங்குவதோடு உலகத்தொழிலாள
ருக்கும் ஓர் உதாரணமாகஇருந்து
வருகிறது. சோவியத் சர்க்கார்
இவ்வளவு சொற்ப காலத்தில்
எவ்வளவு வலிமைபெற்றிருந்த
தென்றால் அவர்கள் தற்போது
தங்கள் கட்சிக்கும்கொள்கைக்கும்
எத்தகைய அபாரகஷ்டம் ஏற்படி
னும் எதிர்த்துப்போராட த்தயா
ராக இருக்கிறார்கள். ஐரோப்பா
எங்குமுள்ள முதலாளிகள் சர்க்
காரை சோவியத் சர்க்கார் எதிர்
த்து நிற்கதயாராகஇருக்கிறார்கள்
லெனின் தலைமையில் வெற்றி
பெற்ற ரஷ்யத்தொழிலாளரின்
வெற்றியானது உலகத்தொழிலா
ளிரின்வெற்றியாகும். அதுதொழி
லாளர் முன்னேற்றத்திற்கு அறி
குறியாகும். உலகில் தொழிலாள
ர்இயக்கம் பரவி மனித சமுதாய
சீர்கேட்டையே அடியோடு மாற்றி
விடுவதற்குஏதுவானது. தொழிலா
ளிகளிடையே தொழில் மதஉணர்
ச்சியை உண்டுபண்ணி யிருக்கிற
து. ஏகாதிபத்தியத்தில் சிக்குண்டு
அடிமை வாழ்வில் உழலும் நாடு
களின் ரஷ்யதொழிலாளர் இயக்க
மும் லெலின் வெற்றியும் புதிய
தேசஉணர்ச்சியையும் உண்டு
பண்ணியிருக்கிறது. பாரசீகம்
துருக்கி ஆப்கனிஸ்தானம் சீனா,
முதலிய இதரநாடுகளில்
அன்னிய இதிக்கத்தை எதிர்க்க
ஆரம்பித்து விட்டார்கள்,

## லெனின் மரணம்.

லெனின் அந்தியகாலத்துக்குப்
பின் சோவியத்சர்க்கார்முன்னிலு
ம்பன்மடங்கு அதிக ஊக்கத்து
டன் வேலை செய்ய வேண்டியதா
யிற்று. 1924ம்வருடம் ஜனவரி
மாதம் 21ந்தேதி உத்தமரான
லெனின் காலகதியடைந்தார்.
அவர்மரணத்தைக்கேட்ட உலக
தொழிலாளரும்விசேஷமாகரஷ்ய
தொழிலாளரும் திடுக்கிட்டனர்.
உலகமெங்குமுள்ள தொழிலாள
ரும் சோவியத்கட்சியாரும் அவர
துமரணத்துக்காகபெரிதும் வருந்
தினர்;

—

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கும் அகப்படுவது அருமை. "உனது உழைப்புவேண்டாம். உனது அவசியங்களும் பூர்த்தி செய்யப்படமாட்டா" என்ற அவச்சொல் அங்கு எழாது. ஓய்வு ஒழிச்சலில்லாமல் உழைப்பினல் ஆண்களும்,பெண்களும் அகாலத்தில் வயோதிகமடைவது,அங்குஅத்திப்பூ; அங்கு, உடல் நலமும், உயிர் வளமும் உடைந்து, சமூக வளர்ச்சிக்குப் பயன் படாது போவதில்லை. தொழிற்சாலைகளும், தொழிற்கருவிகளும் சமூகப் பொதுஉடைமையாக்கப் படுமாகையால் நிர்வாகமும் சிலருடைய நன்மைக்காக அல்லாமல் பொது நன்மைக்காகவே நடைபெறும்.வருங்காலத்தொழிற் சாலையை நாம் நன்ருகச் செம்மைப்படுத்திச் சீர்பெறலாம். தற்காலப் பொதுபள்ளிக் கூடத்தில் எப்படி சமூகத்திற்கு அவசியமான அறிவைப் பெறுகிறேமோ, அப்படியே, வருங்காலத் தொழிற் சாலையிலும் சமூகத்திற்கு அவசியமான உழைப்பே விநியோகிக்கப்படும். பள்ளிக்கூடமும் அதற்குரிய தட்டுமுட்டுச் சாமான்களும் இன்று பொதுஉடைமையாகக் கருதப்படுகிறது. ஆகையால், பள்ளிக்கூடம் தனிப்பட்டவர்களின் லாபத்திற்காக நடத்தப்படுவதில்லை; பொது நலத்துக்காகவே நிர்வகிக்கப்படுகிறது. அங்கு, மாணவ, மாணவிகளின்நன்மையே பிரதான நோக்கம். பள்ளிக்கூடத்தில், சுத்தம் சுகாதாரம் உத்திரவாதம் செய்யப்படுகிறது; பாடநேரம் சுகாதாரத்துக் கேற்றபடிவரை யறுக்கப் படுகிறது; படிப்பதற்கு நேரம், விளையாடுவதற்கு நேரம் கூறு செய்துகொடுக்கப்படுகிறது; உடல்நலமும் அறிவு வளர்ச்சியும் கவனிக்கப்படுகிறது. இதே விதிகளை, பொதுஉடமைத் தொழிற்சாலையிலும் அனுஷ்டிக்க முடியும். அங்கு த்தொழிலாளர் நலமே முக்கிய லட்சியம். சுகாதார வசதிகள் நிச்சயமாய் உதவப்படும்; உடல் நலத்தைப்பாதிக்காமல் வேலை நேரம் வரையறுக்கப்படும்; ஒவ்வொரு தொழிலாளிக்கும் அறிவுக்கொவ்வும் முறையில் வேலை செய்வதற்கும் தமாஷாய்ப் பொழுது போக்குவதற்கும் ஞானத்தைப் பெருக்குவதற்கும், சுயேச்சையாய் வாழ்வதற்கும் நேரம் பிரித்துக்கொடுக்கப்படும். பொதுஉடமைத் தொழிற்சாலைகளில் இரு பாலரும் இன்றையப் பள்ளிப்பிள்ளைகளைப் போல் இயல்போடு திருப்திகரமாக வேலை செய்து வருவார்கள்.


ஃ ஃ

புத்தி நுட்பமும், ஆராய்ச்சித் திறனும், விஞ்ஞான வளர்ச்சியும் பெருகப் பெருக, மனித வாழ்வின் நிபந்தனைகள் விரிவாகி, நவ நவமான இயந்திரங்களும், கருவிகளும் எல்லையின்றி கண்டுபிடிக்கப்பட்டு பொருளாதார அபிவிருத்தி மிகுந்து வளர்ந்து வரும் நாகரீகத்தில், மனிதனுடைய அவசியங்களும் அதிகப்படும். அதன் பயனுய்த் தொழில்களும் பல்வேறு விதமாகக் கிளைத்துப் பெருக ஏது உண்டாகும். ஒரு மனிதனே ஒரு கூட்டமோ குறிப்பிட்ட ஒரு தொழிலைத் தான் செய்ய வேண்டுமென்று கட்டுப்படுத்துவது மாறி, அவரவர் விருப்பத்திற்குத் தகுந்தாற்போல் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் செய்வதற்குரிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் தற்கால சமூகத்தில வளர்ச்சிக்கேற்ற வழியின்றி, அநேக நிபுணர்கள், ஏதாவதொரு இயந்திரத்திலேயே தங்கள் வாழ்க்கை முழுவதையும் போக்குகிறார்கள். பெண் அடிமையாயிருந்த காலங்களில் எத்தனை பெண் ரத்தினங்கள், உலகமறியாமல் சிற்றில்களிலும், அடுப்பங்கரைகளிலும் அநியாயமாகப் பலியாயினர். தற்கால சமூகத் திட்டத்திலும் பெண்களில் சிலருக்கே முன்னேறுவதற்குச் சந்தர்ப்ப முண்டு. தினே தினே கணக்கு வழக்கில்லாது அபார சக்திகளும், உன்னதமான உணர்ச்சிகளும் வெளிக்குத் தெரியாது துக்கரமான முடிவுகளுக்கு இரையாகி, மண் மூடிப் போகின்றன. பசியின் கொடுமையும், உழைப்பின் கடுமையும் இன்று சாமார்த்தியத்தையும், உன்னத உணர்ச்சியையும் சிதைத்து, அபிவிருத்தியை அசாத்தியமாக்குகின்றன. ஆனல் சமதர்ம உலகிலோ, பெண்ணுக்கும், ஆணுக்கும் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளப் பூரண சுதந்திரமுண்டு. ஒவ்வொருவகைச் சாமர்த்தியமும் சக்தியும், நூதனமாகக் கண்டுபிடிக்கும் திறமையும், புதிதாக சிருஷ்டிக்கும் ஆற்றலும், சமூக வளர்ச்சியின் மேம்பாட்டிற்கு அத்யாவசியமென்று மதிக்கப்பட்டு, அவைகளை விருத்தி செய்வதற்காகப்பூரண சந்தர்ப்பமும் அளிக்கப்படும். அவசியமானதாயிருந்து, யாவரும் இஷ்டப்படாத வேலையை, சமதர்ம அரசாங்கம் தொழிலாளிகள் செய்துதான் தீரவேண்டுமென்று வற்புறுத்தினலும் கூட, அவ்வேலை செய்வோருக்கு வேலைநேரம் குறைவாயிருக்கும், வசதிமிகுந்திருக்கும், சுற்றுச்சார்புகள் மனேரம்மியமாயிருக்கும், பிடித்தமான வேறு வேலை செய்யப்போவதற்கும் அவகாசமும் சௌகரியமும் கிடைக்கும்.

ஃ ஃ ஃ

தொழிலாளர் குடி-அரசில் பெண்களின் வேலையைப்பொறுத்தவரையில் சந்தேகமறச் சிலகட்டுப்பாடுகளும், சலுகைகளுமிருக்கவே செய்யும். கட்டுப்பாடுகள், மனிதவர்க்கத்தின் நன்மைக்கு அவசியமான கட்டுபாடுகளாகவேயிருக்கும். தாய்மார்களும், பிரசவவதிகளும் புத்திரசந்தான கைங்கரியத்திற்கு இடைஞ்சல் விளைக்கின்ற பளுவான இயந்திரத்தில் வேலை செய்தல், பல மணிநேரம் தொடர்ச்சியாகவேலை செய்தல், முதலிய பாதகம் விளைக்கும் தொழில் புரிய வேண்டிய தேவையில்லை. முன் எந்தக்காலத்திலும் காப்பாற்றப்படாதவாறு தாய்மை பொன்போல் போற்றிப் பேணப்படும். பெண்மக்களும் மனிதரெனறு நடத்தப்படுவது முக்கியமானதாகவும், முதன்மையானதாகவுமிருந்தாலும் வருந்தலை முறையை ஈன்று வளர்க்க வேண்டியவர்கள் பெண்களென்பதில் மிகமிகக்கருத்துச்செலுத்தப்படும்.

## தொழிலாளர் 'பண்டிகை' மே தினம் ஒன்றே





"பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்ருண்டுகளாக ஆன்ருேர்களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்தினல் தயார்செய்யப் படுவது. வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஸ்டாக்கிஸ்ட்

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு, சென்னை.




'சுந்தரி ஸ்னே.'

ஒரு சுந்தரிஸ்னே வாங்குவோருக்கு
ஒரு கைதுட்டை இனம்.

சுந்தரி ஸ்னே தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் செய்வதோடு முகத்தில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது. நறுமணம் கமழ்வது. விலை மலிந்தது.

ஏஜண்ட்:- A. V. R. A.
அடைக்கப்ப செட்டியார்,
52-பந்தர் தெரு, சென்னை

# ஒரு மிதியடியின் சுய சரிதை

தோழர் இ. சிவம்.

மிதியடி என்றால் நகைக்கின்றனர் சிலர். எனக்குத் தெரிந்தவரையிலும் அந்த சிரிப்புக்கு எத்தகைய பொருளுமில்லை. மிதியடியை மனிதன் உற்றதோழன் என்றும் சிறந்த வழிகாட்டி என்றும் உயர்ந்த பாதுகாப்பாளன் என்றும் சொல்லலாம். சண்டைக்காலங்களில் எங்கள் (மிதியடிகள்) பெருக்கேஒருவிதஉக்ர மூண்டு என்றால் தற்பெருமையேயல்ல. நீதிமன்றக்குறிப் புகளில்எங்கள் பெயரடிபடுவது போல 144-ம்செக்ஷன் கூடகாங்கிரஸ் கூட்டங்களில் அடிபட்டிராது தமிழ்நாட்டில் பல மனைவியர்கள் எங்கட்குப்பயந்துபுருஷர்கட்கு இக்கட்டுப்பட்டுநடக்கிறார்களென்றால் குடும்பவாழ்க்கையில்எங்கட்குள்ளஸ்தானம் நன்கு விளங்கும் உலககுபோர்களில் ஒருவனாகிய பாடா எங்களை நிருமித்து விற்பனை செய்ததின் மூலம் உன்னதமான நிலைமையை யடைந்தாரென்றால் எங்களிடம் புதைந்துகிடக்கும் பொருளாதார தத்துவத்திற்கு வேறு விளக்கம் வேண்டுவதில்லை.

இங்ஙனம் சமூகம்பொருளாதாரம் ஆகிய இரண்டோடு "பட்டறையன்" கோவிலுக்கு எங்களை அருச்சனை செய்வதை நினைத்தால் மதத்தில் எங்கள் ஸ்தானம் விளங்காமற் போகாது மதுரை, போன்ற பெரும் பெரும் ஆலயங்களில் அரசாட்சி செய்து ஆடம்பரம் செய்யும் சொர்க்கேசர் போன்ற மூர்த்திகளும் கூட வாயிலின் ஓரத்தில் மிதியடிசத்தம் கேட்டால் காவற்காரன் அக்கணமே அனுப்பிவிடும் அந்தஸ்தைப் அடைந்திருக்கின்றோமென்றால் அதிகமாக அறைய வேண்டிய அவசியமும் உண்டா? ராஜியவாழ்க்கையில் எங்கள் பதவியை எடுத்தாராய்ந்தால் இந்தியர் ஒவ்வொருவரும் விசேஷமாக இந்துக்கள் அனைவரும் எங்கட்கு அடிமைகட்கடிமையாயிருத்தல் வேண்டும். உலகமெல்லாம் ஒரு தனிக்குடைக்கீழடக்கி சூரியவம்ச ராஜசிங்கங்களால் ராஜ்யபாரம் செய்யப்பட்டு வந்த புண்யயுகத்திலே ஸ்ரீராமபிரான் பித்ரு வாக்கியபரிபாலனம் செய்யும் பொருட்டு தண்டகாரணயம் நண்ணியகாலையில் பரதன் பூஜை செய்ய, நாங்களே 56 பகுதிகளாய்ப் பிரிந்திருந்த பரதகண்டத்தையும் ராஜாதி ராஜர்கள், மன்னாதி மன்னர்கள், வீராதி வீரர்கள், சூராதி சூரர்கள் என்று புகழ் பெருக்கிய நிருபர்களையும் ஆண்டுவந்தோம்என்றால் இந்திய மக்களே! நான் என்தற்சரிதையைச் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்க நீங்கள் எவ்வளவு கடமைப்பட்டிருக்கின்றீர்கள்!!

நான் பிறந்தது திருநெல்வேலி (வீராகவபுரம்) நான் தொழிலாளி கைப்புகுந்து 13 நாட்கள் ஆனபிறகுதான் முழு அங்கமும் அமைப்பும் பெற்று வெளிவந்தேன். அவ்வாறு வெளி வந்த நான் இதர என்னினத்தாரே விடமிகுந்த எழில்பெற்று இலங்கினேனென்றால் நீங்கள் சம்மதிக்கவேவேண்டும். என் அழகுக்குக் காரணம் 1-தொழிலாளியின் கைத்திறன் 2. நான் ஜனனமெடுத்த ராமன் அன் கோ புரோப்ரைட்டரின் வற்புறுத்தல்.

ஆ! என்னழகை என்னவென்று கூறுவேன்! ராமன் கம்பெனி முதலாளியே என்னைப்பார்த்து மயங்கி விட்டார்!! அவர் அபிப்பிராயத்தில் என் துணைவருடன் (மற்ற மிதியடி) நான் ஓர் கண்ணாடிக்கூண்டுக்குள் வாழவேண்டுமென்று பட்டது. ஆதலால் ஒரு குமாஸ்தா இந்தப்பெண்கள் கழுத்திலணியும் தாலியைப்போல ஒரு சிறுசிட்டையை எழுதி ஒரு மஞ்சள் நூலில்கட்டி என்னோடு இணைத்தான். (அந்த சிட்டையின் ஒருபுறம் சுப்பீரியர் குவாலிடி என்றும், மறுபுறம் விலை ரூபாய் 7-8-0 என்றும் எழுதப்பட்டிருந்தது) அப்பால் என்னை என் துணைவனுடன் ஓர் கண்ணாடிக்கூண்டில் அடைத்து சுவரில் மாட்டினான். ஆ! கண்ணாடிக்கூண்டு வாழ்க்கையோ சொல்லமுடியாத சிறை!! தொல்லை!! துன்பம்!!

என்றாலும் எப்படியாவது போகட்டும் என்று கண்ணாடிக்கூண்டுக்குள் என் உணர்ச்சியை யெல்லாம் அடக்கிக் கொண்டு நானும் என்தோழனும் சும்மா விருந்தோம். தினந்தினம் பலர்வெளியே நின்று எங்களைப்பார்த்து பேராசைப்பட்டும், எங்களைப்பற்றிப் பேசியும் வியந்தும் சிலகால் விலையைக்கேட்டு ஆச்சரியமடைந்தும் போயினர் எங்கள் அந்தஸ்து கொஞ்சம் குறைந்திருக்குமானால் நிச்சயமாகவும் மனித சமூகத்தைக் கலந்து சுயேச்சையாக உலாவி வந்திருப்போம். அந்தஸ்துப் பெருகப்பெருக கஷ்டமும் சுதந்திரமும் நிம்மதியும் குறைவுதானே!

நாங்கள் சுமார் மூன்று மாதம் கண்ணாடிக் கூண்டுக்குள் பயனற்ற சிறை வாழ்க்கை வாழ்ந்து வந்ததும், ஒரு நாள் மாலையில் ஒரு புருஷனும் மனைவியும் எங்களை நாடினார்கள். அவர்களின் சொந்தவூர் அம்பாசமுத்திரம். அப்புருஷனின் அபிதானம் அம்பை அநவரத விநாயகம் ஆகும். அம்மங்கையின் பெயரோ மங்கையர்க் கரசி. அவள் அநவரத விநாயகத்தின் மூன்றாவது தாரம்— தோற்றத்தில் தாரமே தவிர உண்மையில் தாரமல்ல. அ. விநாயகத்தின் தளர் நடை, கர்னாடக உடை, தரும் விடைகட்கும், மங்கையர்க்கரசியின் நடைத்தடபுடல், உடைப் படாடோபம், பார்வை டாம்பீகம், பாவனை ஆர்ப்பாட்டம் ஆகியவற்றிற்கும் அஜகஜாந்தரம் அவளுடைய உடம்பில் போதிய அழகு தொக்கியிருந்தது. அந்த அடிகைவிட பணக்காரக்கொழுப்பு, பழுப்பு, முழுப்பு ஆகியவை ஜாஸ்தி. அவள் இடையில் எழுபது ரூபாய் மதிக்கத்தகுந்த பங்களூர்க் கண்டாங்கியும், கழுத்து, மூக்கு, கைகளில் ஐயாயிரம் ஆறாயிரம் பெறத்தகுந்த வைர, பொன் நகைகளும், உடம்பில் ஜம்பரை மூடிப் புதைந்து ஒரு உயர்தரமான பட்டு ஜாக்கட்டும் விளங்கின. அவற்றை அவள் மிகப் பெரிதாக மதித்துவிட்டாள்; பிறரும் மதிப்பதாக எண்ணி விட்டாள்; ஆதலால் அவள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடிக்கும் ஒரு முறை கழுத்தை யொருபுறம் குழைத்து, உடம்பை யொருபுறம் வளைத்து, கண்ணை யொருபுறம் ஓட்டி, வாயையொருபுறம் கோணி சேஷ்டை செய்யலானாள். பொதுவாக அவள் நடை சர்க்கஸ் வேலை செய்வதை நினைப்பூட்டிக்கொண்டிருந்தது.

அவள் வீராகவபுரம் பஜாரில் நடக்க ஆரம்பித்ததும், அநந்தம் காலிகள் ஆங்காங்கே கூடி நின்று தம் கண்கட்கு வேலையைக் கொடுக்கத்தொடங்கினர். நமது நாட்டில் ஆண்கட்கும் பெண்கட்கும் நேர்மையாக நடந்து கொள்ளத்தெரியாதன்றோ?

இங்ஙனம் பல ஆடவர் லாகிரி பிடித்து நிற்பதையும் மங்கையர்க்கரசி சர்க்கஸ் வேலை செய்வதையும் கண்டதும் அநவரத முதலியாருக்குச்சற்றுமே பிடிக்கவில்லை. நாணமும் வெட்கமும் எரிச்சலும் அவர் தலையில் எஞ்சியிருந்த ஒரு சில மயிரைப் பிடித்து அசைக்க ஆரம்பித்தன. ஆகவே தாம் வந்த காரியத்தை எளிதில் முடித்துவிடக் கருதி ராமன் அன்கோவில் புகுந்து ஒரு சாதாரண மிதியடியையெடுத்து விலை கேட்கலானார். கடைக்காரன் இரண்டு ரூபாய் விலை சொல்ல, அவர் மற்றொரு மிதியடியை எடுத்தார். அதற்குள்ளாக மங்கையர்க்கரசி என்னைப்பார்த்துவிட்டதால் கணக்கப்பிள்ளையின் உதவியால் எனக்கு விடுதலையளித்தாள். அவள் கைகளில் ஏறியுட்கார எனக்கும் விருப்பம் தான்! ஆனால் அந்தக்கிழ முதலியார் கோபத்துடன் அவளையொரு பார்வை பார்த்து "கீழே போடு கழுதை. உனக்கு மிதியடியாவேண்டும்? உன் முதுகில் தருகிறேன் மிதியும் அடியும்; வா வீட்டுக்கு ஒழுக்கம் கெட்ட நாய்" என்று முணுமுணுத்தார். உடன் அவள் தோற்றத்தில் ஓர் திடீர் மாற்றமேற்பட்டது. என்றாலும் அவளது நாட்டியமும் கண்ணோட்டமும் நிற்கவில்லை. கிழவன் யௌவனப்பெண்ணை மணந்தால் பார்வையும் நாட்டியமும் தான் அபிவிருத்தி அடையும்? தகா பந்தத்தில் தகாவிளைவன்றி உதயமாகுமா!!

முதலியார் மங்கயர்க்கரசியை கடிந்த மறுநிமிஷத்தில் முக்கால் ரூபாய்க்கு ஒரு மிதியடியை வாங்கிக்கொண்டுவெளிநடந்தார். மங்கையற்கரசியோ தன் பிரசாதத்தை வேண்டி நின்றவர்கட்கெல்லாம் சேர்த்து ஒரு பார்வையருள் சேர்த்து கொடுத்து விட்டுப் பின் தொடர்ந்தாள்.

இந்த சிறுநாடகத்தில் ஒருதனி நடிகரைப்பற்றிச் சிலசொல்லவேண்டும். ராமன் கோவில் மங்கையற்கரசியைத்கண்ணினால் தாக்கினோர் பல்லோர் என்றாலும், நாதமூர்த்தி என்னும் வாலிபனது பார்வை யெல்லோரையும் ஜயித்து விட்டது. நாதமூர்த்தி தாழை யூற்றுவாசி. தொழிலால் அவன் ஓர் நாடகக்காரன். சுமாராக பாடவும் நடிக்கவும் செய்வான். ஆனால் ஆள்பெரிய தடபுடல்-பார்த்த பார்வையில் போடலாம் பதினாயிரம் ரூபாய்க்கு ஜாமீன். ஓயாது பெண்கூந்தல் போன்றதன் குடுமி முழுவதையும் சீவிக்கட்டி அதில்ஒரு புஷ்பக்கொத்தைக்சூட்டி காதில் இமிடேஷன் வைரத்தோடாஒன்றை(கடுக்கன்) பூட்டி கையில் ஒரு ரிஸ்ட் வாட்சைமாட்டி புன்சிரிப்பொன்றை முகத்தில் கூட்டி, ஒருதிலகத்தை நெற்றியில் தீட்டி பட்டு ஷர்ட் ஒன்றுடன் உல்லாச நடைநடந்து திரிவான். பொதுவாக அவனைப்பார்த்தால் பகலிலேயே வேஷம்போட்டு திரிபவன் போல் தோற்றும். பிரஸ்தாப நாளில் அவனுக்கு நாடகம் ஒன்றும் இல்லாததால் ராமன் அன்கோ பக்கம் உல்லாசமாக வந்திருந்தான். வந்தவிடத்தில்தான் மங்கையர்க்கரசிகாட்சிவிருந்து கிடைத்தது.

ஃ ஃ

அவன்மங்கையற்கரசியைக் கண்டதும் என்ன "சாக்கில்" கடையை நெருங்கலாமென்று யோசித்தான். அப்பொழுது அவள்கையிலிருந்து நான்கீழே வைக்கப்பட்டேன். உடனே ஒருயுக்தி தோன்ற "அவள் வாங்காத பொருளை நான் வாங்கிவிடுவது ஒரு ஷோக் அல்லவா" என்று தனக்குள் கூறிக்கொண்டு கடையை அணுகினான். அவன் விலையை விசாரித்து கடைக்காரன் ரூ. 7—8—0 என்று பதில்கூறினான். உடனே சற்றும் பொருட்படுத்தாது அலட்சியமாக வீசிவிட்டு பரீக்ஷை வேலையில் வாத்தியாருக்குத்தெரியாமல்விட்டு வெளியே வந்து விட்டமாணவன் மாதிரி இறுமாந்து மங்கையற்கரசியை கடைக்கணித்தான். அவளும் அவன் அருஞ்செயலை ஆமோதித்தாற் போலகடாக்ஷம் [illegible]தான். ஆகவே

வீரராகவபுரத்தில் நின்ற எல்லாகாலிகளையும் விட நாதமூர்த்தியின் சித்திரம்தான்மங்கையற்கரசிக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்றால் தவறாகாது.

○ ○

எனக்கு நாதமூர்த்தியின் உறவு பிடிக்கவேயில்லை. என் துணைவனுக்கும் சுயமரியாதைக்காரர்களைக் காணும்பூரிசங்கராசாரியாரின் கசப்பே தோன்றிற்று. ஆகவே சிலநாட்கள் நாதமூர்த்தியின் கால்களை நன்றாக கடித்து வந்தோம். ஆனால் அந்த "சரணை" கெட்டமனிதப்பதர் கோபங்கொள்வதற்கு பதிலாக எங்கட்கு எண்ணைதேய்த்துத்தடவி உபசாரணை செய்தான். ஒருவன் எவ்வளவு படுபாவியாயிருந்தாலும் பணிந்து வந்துவிட்டால் பகைமை தோன்றாதல்லவா? அதேபோல நாங்களும் அவன் பகைமையை மறந்து அவனோடு ஒன்றிவாழலானோம். அப்போது அடடா! அவன் செய்த அட்டூழிய ஆபாசத்தொகைகட்கு அளவுண்டா? ஒவ்வொரு நாளும் போக்கிரித்தனம், ஒவ்வொரு நாளும் குறும்பு, ஒவ்வொரு நாளும் அக்கிரமம். ஆனால் எங்களை அவன் உயர் வானவைகள் என்று எண்ணுகின்ற இடங்களைதவிர, வேறு எங்கும் போட்டுக்கொண்டு போகமாட்டான்.

இவ்வனம் நாங்கள் அவனிடம் அருசியுடன் வாழ்ந்து வரும் நாளில், அவன், ஒரு ஜானகி, ஒரு ரங்கசாமி, ஒரு ராஜாம்பாள் ஒரு பாலசுந்தரம், ஒரு முத்துசாமி ஆகிய சில ஆக்டர்களைச் சேர்த்து ஒரு நாடகக்கம்பெனியைஅமைத்துக்கொண்டு பலவூர்கட்குச் சென்று நடிக்க ஆரம்பித்தான். அந்தக்கம்பெனியை பலர் சிலாகித்தனர் ஆதலால் சுமார்ஆறு மதங்களில் சற்றேறக்குறைய 4000 ரூபாய், வரையிலும் மீதமாயிற்று அந்த 'ஜோரில்' நாதமூர்த்தி தன் கம்பெனியை அம்பாச முத்திரத்திற்குக், கொண்டு சென்றான் அங்கும் எக்காரணத்தாலோ ஜனங்கள் கம்பெனியைப் பாராட்டினர்.

நாத மூர்த்திக்குக் கோவில்கட்குச்செல்வதில் மிகுந்த ஆசை. எந்தவூருக்குப்போனாலும் முதலில் ஒருநாள் அங்குள்ள ஆலயங்கட்குச் சென்று தொழுது முடிப்பான், அதேபோல அம்பாசமுத்திரம் சென்றதும் ஒரு நாளிரவு அங்குள்ள அகஸ்தியர் கோவிலுக்குப்போனான் அப்போது மணி எட்டுமுப்பது இருக்கலாம். பெரும்பாலாக எல்லாபக்தர்களும் போய்விட சில விதவைப்பக்தர்களும் சில ஐயர் பக்தர்களுமே நின்றுகொண்டிருந்தனர். அந்தவேளையில் நாதமூர்த்தி வேலைக்காரர்கள் சூழ,தடபுடலாக ஆடைகட்டி, தாம்பாளங்களில் பூ, பழம், தாம்பூலம், தேங்காய் தக்ஷிணை ஆகியவைகள் நிறைய உள் நுழைந்தான் அவன் கண்கள் சாமியைத் தரிசிப்பதற்குப் பதிலாக முதலில்அங்கு நின்றவர்களை ஆராய்ச்சி செய்தன.சற்றுநேரம் ஆராயவும் அக்காரிய பயிற்சிபெற்ற கண்கள் ஓர் பழகிய உருவத்தைக்கண்டு கொண்டது. அவ்வுருவம் யார் தெரியுமா? அதுதான்மங்கையர்க்கரசி. அவளைக் கண்டதும், சிறிது தூரம் யோசிக்க நாதமூர்த்தியின் மனத்தில் வீரராகவபுரம் பஜாரில் ஆடியநாடகம் ஞாபகத்திற்கு வந்தது அவ்விதமேமங்கையர்க்கரசியின் மனதிலும் பழைய உணர்ச்சி வந்திருக்கலாம் போலிருக்கிறது. அவள் புன்னகை பூக்க, மனம்பூரிக்க அங்கங்குழைய ஒரு பார்வை பார்த்துப்போனாள்.சரியான ஆரூட சாஸ்திரியொருவன் அப்போது கண்டால் அவள் பார்வைக்கு "இங்கு இவன் எப்படி வந்துவிட்டான்" என்பது பொருள் என்று கூறி விடுவான். நாதமூர்த்தி ஒரு சாஸ்திரியல்ல; ஆயினும் எத்தனையோ பேர்களைப்பார்த்துப் பார்த்துத்தேர்ந்த பழக்கத்தால் அவள் கண்ணொளியின் கருத்தைத் தெரிந்துகொண்டான்.எனவே அங்குநின்ற ஒருவனை நோக்கி "அடே நாளை நின்று என்ன நாடகம் போட்டிருக்கின்றாய்?" என்றான். அதற்கு அவன் "வள்ளி திருமணம்" என்றான் "சரி" என்றுதலையை அசைத்துவிட்டு மீண்டும் பக்தியில் ஆழ்ந்தான். மங்கையர்க்கரசி இதிலிருந்து நாதனைத்தெரிந்து கொண்டிருக்கலாமல்லவா?

○ ○ ○

நாதன் மங்கையர்க்கரசி சந்திக்க மூன்றாம் நாள்,அம்பை (அம்பாசமுத்திரம்) தகரக்கொட்டகையில் வள்ளி நாடகம் நடைபெற்றது. ஏராளமான ஆண்களும் பெண்களும் வந்து கூடினர். கழுகாசலசின் வந்ததும் அதில் நாதமூர்த்தி கழுகாசலனாகவேடம் புனைந்து, தோகை விரித்தாடும் பச்சைமாமயில் அட்டையொன்றின்மீது தடிவேல் தாங்கி நின்றுகொண்டிருந்தான். அவன் தோற்றம் கொஞ்சம் அழகாகவே இருந்தது. ஒன்றிரண்டு கிழவிகள் "வேலாயுதா வேலாயுதா" வென்றுகூடகத்தி வணங்கினர். சிலர் அவன் மீது ஆசைகொண்டாலும் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு விஷயம் மட்டிலும் வெட்ட வெளிச்சம்.

பெண்கள் கூட்டத்தில் உட்கார்ந்திருந்த மங்கையர்க்கரசி ஏதோ வயிற்றுவலி ஏற்பட்டதைப்போலமுணுமுணுத்து உறுமிக் கனைத்து உருண்டு புரண்டு கொண்டிருந்தாள். அதோடு பன்முறை எழுந்து உட்காரவும் செய்தாள். ஆதலால் பயிற்சி பெற்ற நாத மூர்த்திக்கு அவளிருப்பதை யுணர்ந்துகொள்ள முடிந்தது. அவ்வமயம் நடந்த சீன வேடன் தோற்றமாகும். நாதன் அந்த சீனை பயன்படுத்தக்கருதி, தான் நாடகத்தில் நடிக்கின்றான் என்பதையே மறந்து, மங்கையர்க்கரசி உட்கார்ந்திருக்கிற இடத்தை நோக்கி "பூவையே நீ மார்க்கம் சொல்லுவாய்" என்றஒருகீர்த்தனையைப்பாட ஆரம்பித்தான். அதன் கருத்து நாடகத்திற்கோ சந்தர்ப்பத்திற்கோ பொருத்தமானதாயில்லை. பலர் ஏன் அதனைப் பாடுகிறானென்பதைத் தெரிந்தாரல்லர். உடன் ஆக்டு செய்த ஜானகி "ஐயா நாடகப்பாட்டைப்பாடுங்கள்" என்றாள். நாதன் ஒன்றும் புலப்படாது தாளம் பிடித்து பின்ராக ஆலாபனை செய்யலானான். கடைசியில் நடிகர்களில் பலர் குடி வெறி அதிகரித்து விட்டதென்று நினைத்து பால சுந்தரம் என்பவனைக் கிழவனாக ஆக்டு செய்ய ஏவினர்.

மங்கையர்க்கரசி நாத மூர்த்தி வராததைக்கண்டதும் ஏதோ உளவிருக்கவேண்டுமென்று கருதி மெல்ல எழுந்து வீடு நோக்கி நடக்கலானாள். இதனை எதிர் பார்த்திருந்த நாதனும் மெதுவாக ஸ்டேஜை விட்டு வெளிப்பட்டு வேறொரு மார்க்கமாக ரோடுக்கு வந்தான். அங்கு கொட்டகையை விட்டு ஒரு பர்லாங்குக்கப்பால்—இருவரும் சந்தித்தனர். நல்ல இருளாகையால் வேறு ஒருவருமில்லை. நாதமூர்த்தி "அது யார்? ஆ! அம்மாவா? கேட்பதுநாதமூர்த்தி. எங்கு தனியாகச் செல்லுகிறீர்களே! வீடு மிகவும் எட்டி இருக்கிறதோ" என்றான். அதற்கு காதல் கலை நன்கு தெரிந்த மங்கையர்க்கரசி நாணத்தோடு "எனக்கு மேட்டுப்பாளையம் தெருவுக்குச் செல்லவேண்டும். அதிலிருக்கிற மூன்று மெத்தை வீடுதான் என்னுடையது. அதன் பின்புறவாயில் திறந்துதானிருக்கும். ஒருவரும் காணாது போய் விடுவேன். என்னைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள்?" என்று அரைகுறையாகக் கூறிப்போனாள். நாதன் அவள் கூற்றின் கருத்தைத்தெரிந்துகொண்டு நல்லது நான்போகிறேன், நாளை இரவு எனக்கு நாடகமில்லை என்றான்.

○ ○ ○

அதிகமேன் நீட்டவேண்டும். மறுநாள் இரவு நாதமூர்த்தி ஓர்அசல் மைனர்வேடம் புனைந்து,செண்டுதடவி, நன்றாகக்குடித்துத்தாம்பூலம்தரித்துக் கொண்டுமெதுவாகமேட்டுப்பாளையம் தெருவை நோக்கி நடந்தான். கடுமையான இருளாகையால் நன்றாக அடையாளம் தெரியவில்லை; என்றாலும் தாமிரவர்ணிக் கரை வரையிலும் நடந்து அங்கிருந்து தத்தித்தடவி எப்படியோ மூன்று மெத்தை வீட்டின் பின்புரம் போனான், நல்லவேளையாக இல்லை மங்கெயர்க்கரசியே விஷயத்தை அறிவாளே ஆகையால் வாயிலொன்று திறந்திருந்தது. அதனைக்கிட்டி உள்ளே நோக்கினான ஆ! சர்வாபரண பூஷிதையான மங்கையர்க் கரசி சோகமுற்று அவன் வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். நாதமூர்த்தியின் பாக்கியந்தான் என்னே!

அவன் சிறிதாக எரிந்து கொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தில்தன் காதலியைக் கண்டதும் மதிமயங்கி குடிவெறி தலையெடுக்க, அவர்கள் பாதத்தில் விழுந்தான். பின்பரவசமடைந்த சுப்பிரமணிய வேடன்போல நடித்து "மானே உனக்குண்டோ நிகர்வகு மாட்சியுள்ள காட்சிதரும் மானே உனக்குண்டோ நிகர்" என்று நாலவரைக்கட்டை சுருதியில் பாடலானான். இரகசியத்தில் நாதனை அடைய வேண்டுமென்றிருந்த மங்கையர்க்கரசி திடீரென பாட்டெழும்பியதைக் கண்டதும், போலீசார் லத்தியைக்கண்ட காங்கிரஸ் தொண்டர்போல ஒரேயடியாய் ஏக்கமுற்று அவன் வாயைமூடயத்தனித்தான் அவனோ புருஷனல்லவா? கையை உதறித்தள்ளிவிட்டு அனுபல்லவியைப் பாடத்தொடங்கினான்.

○ ○ ○

நன்றாக மேல்மாடியில் தூங்கிக் கொண்டிருந்த அசவரத முதலியார் காதில் நாடகப்பாட்டு விழுந்ததும் திடுக்கிட்டெழுந்து சுற்றுமுற்றும் பார்த்தார். தன்வீட்டில் அடுப்படியில் நாடகம் நடைபெறுவதுபோல் தோற்றிற்று.உடனே எழுந்து ஓடி வந்தார் அதற்குள் சில வேலையாட்களும் பாட்டைக்கேட்டு ஓடிவந்தனர். எல்லோரும் வந்து கூடவும் திடீரென ஞாபகம் வரப்பெற்ற நாதமூர்த்திதான் செய்த தவறை யுணர்ந்து வெருண்டு ஓடத் தொடங்கினான், பலவயல்கள், வரப்புகள் எல்லாம் கடந்துகைகால்களெல்லாம் காயம்படி படதப்பிதன் ஜாகை சேர்ந்தான்.ஆனால் பரபரப்பில் நான் என துணைவனோடு (மட்டிலும்மங்கையர்க்கரசியின் முன் போடப்பட்டு விட்டேன். அ. நாயக முதலியார் என்னைகையிலெடுத்துக் கொண்டு ம. அரசியை ஒருபார்வைபார்த்தார். அப்பார்வையின் உக்ரத்தால் தன்னையிழந்த மங்கையர்க்கரசி நானொன்றும் அறியேன் கதவைத்திறந்துகொண்டு கொல்லைப்பக்கம் சென்றதும் ஒருவன் யாரோ தெரியாது திடீரெனப்புகுந்து பாட ஆரம்பித்தான்" என்று கூறிக்கொண்டு "கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டால் இது தான் துன்பம் ஓடியவனைப்பிடிக்க முடியவில்லை இப்படி வந்தவனை விட்டுவிட்டால் என்போன்ற இளம் பெண்கள் குடியிருப்பதெப்படி? என்று புருஷன்மேல் குறையைப்போட்டு அழலானாள். முதலியார் பரக்கப்பரக்க விழித்துவிட்டு குற்றம் தன்னுடையதுதானென்று நினைத்து மனைவியை சமாதானம் செய்துவிட்டு நாதனைத்தொலைக்கவழிதேடினான்.

○ ○ ○

ஓடிய நாதமூர்த்திக்குத் தன்மேல் பழியேற்படுமென்பது தெரியும். ஆகவே தன்னைக்காப்பாற்றிக் கொள்வதற்காக மறுநாள் பொழுது விடிந்ததும் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஒரு வழக்குப் போட்டான். அதில் வாதியாக நின்றவன் கம்பெனி வேலைக்காரனான சாத்தான் என்பவன் அவன் ஓர் "தடியன்" அதிகம் புத்திமயா படிப்போ இல்லாத காட்டுமிராண்டி, பிராதில் அடியில் வருமாறு சொல்லப்பட்டிருந்தது!

"நான் (சாத்தான்) நாதன் கம்பெனி வேலைக்காரன் எதிரியான அ. நாயக முதலியார் உள்ளூர் தனவந்தர்களில் ஒருவர் எதிரி டிக்கட்வாங்கின வகையில் ரூபாய் 43 5 0 தரவேண்டும். அதனை வசூலிக்கும் பொருட்டு நேற்று சாயங்காலம் போனேன் போனவிடத்தில் முதலியாரும் வேலைக்காரர்களும் சேர்ந்து என்னை அடித்துத்துன்புறுத்தி என் மிதியடியைப் பிடுங்கிக்கொண்டார்கள். மிதியடி அவர்கள் வீட்டிலிருப்பது என் கூற்றுக்கு சாட்சி"

இந்தப்பிராதை தாக்கல்செய்ததுடன், சர்ச் வாரண்டுக்கு ஆர்டர்பெற்று நாதன் முதலியார் வீட்டிலிருந்து தன் பெயர் பொறிக்கப்பட்ட மிதியடிகளையும் சாட்சியாக எடுத்து விட்டான். முதலியார் கதியென்ன பார்த்தீர்களா? அவர் களங்கமுற்று அவமானமடைந்ததோடு நில்லாது வழக்கிலும் மாட்டிக்கொண்டுவிட்டார். இனி அவ சாத்தனை அடிக்கவில்லையென்று நிரூபிக்கவேண்டும். இன்றேல் தண்டனைக்காளாக வேண்டும். இந்தநிலை ஏற்பட்டதும் அவர் அடைந்தகோபத்திற்குஎல்லை யில்லை. என்றாலும் உள்ளூர் வக்கீல் ஒருவரை அமர்த்தி வழக்காடினார். வழக்கு சிலதினங்களாக நடைபெற்றது. நாதமூர்த்தி ஏராளமாக பணம் செலவிட்டான். இந்தியாவில் பணச்செலவுதானே வழக்கின் வெற்றிக்கு கேது.

முதலியார் நாளடைவில் தன்கட்சி தோல்வியுறுமென்று கண்டதும், சில நண்பர்களுடன் யோசித்து விட்டு, நாகசுந்தரம் என்ற நாகர் கோவில் வக்கீல் ஒருவரை வரவழைத்தார். நாகசுந்தரம் ஓர் பழைய தாத்தா; நல்ல அனுபலசாலி; புத்தியுமுடையவர். அவர் வந்ததும் வழக்கு நன்றாக நடைபெற்றது. ஆனால் வாக்கு மூலங்களாலும் சாட்சியத்தாலும் முதலியார் ஜயிக்கப்போவதாகத் தெரியவில்லை. எல்லோரும் முதலியாரையும் நாகசுந்தரத்தையும் ஏளனம் செய்யலாயினர். கடைசியாக "ஹியரிங்" நாள் வந்தது. வாதி பக்கம் வக்கீல் வெற்றிகரமாகப் பேசி முடித்தார். மாஜிஸ்டிரேட் முதலியாரைத் தண்டிக்க நிச்சயித்தார். அப்போது நாகசுந்தரம் எழுந்திருந்து "என் கக்ஷிக்காரர் குற்றம் செய்ததாக சாட்சிகள் கூறுகின்றனர். வாதியும் சத்தியம் செய்கிறார். அதற்கேற்றாற்போல சாத்தன் அணிந்து சென்ற மிதியடியும் துப்பாக எடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே முதலியார் குற்றம் ஒப்புக்கொள்ளப்படாமலிருக்க வழியில்லை" என்று நீளமாகப் பேசி விட்டு, கடைசியில் "ஆனால் ஒரு விஷயம். சாத்தன் விவாத மிதியடியைக் காலில் அணிந்திருக்க முடியுமா? என் பார்வைக்கு சாத்தன் கால்கள் மிகப்பெரியவையாகவும் மிதியடி மிகச் சிறியவையாகவும் தோற்றுகின்றன. ஆகவே இந்தக் கோட்டின் முன்பு சாத்தன் மிதியடியை காலில் மாட்டிக்காண்பிக்க வேண்டும்" என்றார். உடன் மாஜிஸ்டிரேட் அதற்கு உத்திரவிட சாத்தன் எங்கள் மீது காலை வைத்தான்.

ஹா! என்ன அறிவு, புத்தி யூகம் வக்கீலுக்கு!! எங்களைப்போல இருபோல இரு மடங்கு பெரிதாயிருந்தது சாத்தனின் கால்!!! ஆகவே பலர் கொல்லென்று நகைத்தனர். வாதி திகைத்தான். வாதி திகைத்தான். நாதன் மயங்கினான். மாஜிஸ்டிரேட் வெட்கித்தார். முதலியாரோ, படுகுழியிலிருந்து வெளிப்பட்டவர் போல சந்தோஷம் கொண்டு நாகரீகத்தை விழுங்கப்பார்த்தார். அதிகமேன்? நாதன் நாணிச்செல்ல முதலியார் ஜயமடைந்தார்.

ஃ ஃ

இவ்வாறு நடந்த திருவிளையாட்டால் நான் மக்களுறவை விட்டுப் பிரிந்து கோர்ட்டில் ஒரு பெட்டியில் அடைக்கப்படலானேன், வழக்கு முடிந்த பிறகும் என்னை யொருவரும் தேடுவாரில்லை, நானும் உடல் மெலிந்து அழகிழந்து போய்விட்டேன், அதனாலோ என்னமோ?

சுமார் ஆறுமாதம் பெட்டிக்குள் கிடந்ததும் ஒருமாஜிஸ்டிரேட்கோர்ட் சிப்பாய் (சேவகன்) என்னை மெதுவாகத் திருடிக்கொண்டு சென்று உபயோகிக்கலானான். ஒரு நாள் பகல் 10 மணி சுமாருக்கு அவன் என்னை ஒரு நண்பர் வீட்டின் முற்புறம் போட்டு விட்டு உள்ளே சென்று பேசிக்கொண்டிருந்த போது ஓர் நாய் வந்து என்னைக் கவ்விக் கொண்டு ஓடியது. சுமார் மூன்று களங்களும் இரண்டு சந்தும் ஐந்து சுவரும் நாயினால் கடக்கப்பட்டேன் கடைசியில் ஒரு சிறிய கற்சுவரைகடக்க நாய் முயற்சித்த போது நான் தவறி மறுபுறம் போடப்பட்டேன். அங்கு நல்லவேளையாக தரையில் விழவில்லை நன்றாக ஊர்ப்பிச்சையெடுத்துச் சாப்பிட்டு நண் பகல் ஊக்கத்திலாழ்ந்திருந்த ஒரு சந்நியாசியின் நெஞ்சில் தொப்பென்று விழுந்தேன் உறக்கத்தில் செருப்படி கிடைத்தால் எப்படியிருக்கும்?

அந்தக் கிழ சந்நியாசி திடீரென விழித்துச் சுற்றுமுற்றும் பார்த்தான் யாருமில்லை, நான் (ஒரு மிதியடிமட்டும்) கிடப்பதைக் கண்டு ஆச்சரியமுற்றான், ஏதோ ஆண்டவன் வானுலகிலிருந்து மிக அழகிய மிதியடியை அவனிடம் சமர்ப்பித்து விட்டதாகக் கருதினான் உடன் வந்து ஆனந்தம் பக்தி; பரவசம்!! அவன் என்னைத்தலையில் வைத்துக் கொண்டு கூத்தாடினான், ஆண்டவா உன் நாமம் வாழ்க யான் செய்த பாவமெல்லாம் நீர ஓர் புனிதமான மிதியடியை அருளினாயே நான் பரிசுத்தனானேன்! உன் கட்டளைப்படியே இதனை சித்திரை 18-ம் நாள் பசுபதி கோவிலில் சேர்க்கின்றேன்,என்று கூறிஆனந்தித்தான்

ஃ ஃ

பின்பு அவன் இச்சித்தபடியே சித்திரை மாதத்தில் என்னை சகல விபவங்களோடும் பசுபதி யாலயத்திற்குக் கொண்டு சென்று மேள தாளங்கள் முழங்க ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்தான் அங்கு பலர் என்னைப்போற்றியதோடு புனிதமாகவும் நினைத்தார்கள் கண்ணில் ஒத்திக் கொண்டவர்களும் பலர் நான் அங்குள்ள மிதியடிகளில் பிரதமமாக வைக்கப்பட்டேன். சிலர் காலணா, அரையணா கொடுத்து என்னால் செருப்படியும்பெற்றார்கள்.

இந்தத் தொழில் இப்பொழுதும் நடை பெறுகிறது. இக்கதை சொல்வது வரையிலும் சுமார் 8000 இந்துக்களை நானடித்திருக்கலாம். ராமன் அன் கோ புரொப்ரைட்டரே ஒரு தடவை வந்து ஒன்றரை அணுவுக்கு அடி வாங்கிப் போனார்.

எனக்கு நான் செய்யும் வேலையை நினைக்க நினைக்க நகைப்பு வருகிறது. நான் பட்ட பாடு என்ன? இருந்த நிலை என்ன? இப்போது தெய்வீகத் தன்மையுடனிருக்கின்றேன். வாசகர்களே மிதியடி இழிவானதா! என் சரித்திரத்தால் இந்து மதத்தின் நிலைமையையும் வைதீக மூடத்தனத்தையும் உணருங்கள். வணக்கம்

---


டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0

டிக்கட்டிற்கு பணம்பெற முடிவு தேதி 15-5-34



முதல் பரிசு பெற்றவர்.

மியூட்சுவல் கிளப்

டெர்பி

6—6—34.

எல்லா விடங்களிலும் எமது சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை.

அதிகாரம் பெற்ற மியூட்சுவல் கிளப் ஏஜண்டு:—

S. K. வரதராஜலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S.I.

நமது திருப்பூர் ஏஜண்டு:—

பி ஆர் துரைசாமி அய்யர்,

எஸ். ஐ. நியூஸ் ஏஜண்டு, திருப்பூர்.

(3ம் பக்கத்தொடர்ச்சி)

யாது வாடுவதற்கு முடியாதிருக்கின்றதென்றால். தொழிலாள சமூகம் எவ்வளவு பிற்போக்கில் உள்ளதென்பதை அறிவாளிகளே ஆராய்ந்து தெளியவேண்டும். இப்பேர்க்கொத்த இழி நிலையிலுள்ள தொழிலாளர்களின் குறைகளை எடுத்துக்காட்டிப்பரிகாரம் தேட வேண்டியதே "மே" தினத்தின் முக்கியாம்சமாகும். பாடுபடுவதற்குத் தக்க பலனை தொழிலாளர்கள் பெறவேண்டுமென்பதே "மே" தினவிழாவின் தத்துவமாகும். ஆகவே "மே" தின விழாவில் பெண்கள் பங்கெடுக்கவேண்டியது பெரிதும் அவசியம். இன்று பெண் சமூகம் உள்ள நிலையில் தாங்களாகவே பொது விஷயங்களில் துணிந்திறங்கி தொண்டாற்றுவார்களென எதிர்பார்பதற்கில்லை. தொழிலால் பெண்கள் அடைந்துள்ள தாழ்ந்த நிலையைத்தகர்தெறியஎல்லாத்தொழிலாளர்த் தோழர்களும் உணர்ச்சியுடன் உழைக்குமாறு வேண்டுகிறேன். தொழிலில் பெரும்பாலும், வாலிபர்களாயிருப்பதால் "மே" தினத்தில் வாலிபத் தோழர்கள் உண்மையை உணர்ந்து பெண்களின் குறைபாடுகளை நீக்கத் தக்க மார்க்கத்தில் ஊக்கங்கொள்வார்களென நம்புகின்றேன். சரீரத்தால் பாடுபட்டு, சலியாக உழைப்பைக் கொண்டு, சவுகரியத்தையேகாணாத தொழிலாளர்களின் குறைகளைத் தீர்க்கும் திருநாள் "மே" தினம் ஒன்றே. பெண்கள் காலமெல்லாம், உழைத்து உழைத்து இறுதியில் இழிவும், பழிப்பும் பெறுவதுதவிர வேறில்லையாதலால், பெண்களின் விடுதலைத் திருநாளும், இம் மேதினம் ஒன்றேயாகும். எனவே தொழிலாளத்தோழர்கள் யாவரும் சமதர்மவாதிகள் அனைவரும் கடமையை உணர்து தங்கள், தங்கள் ஊரில் "மே" தின விழாவை, உலகத்தொழிலாளர்கள் தினத்தை அவசியம் கொண்டாடி, தாழ்த்தப்பட்டு, அடக்கப்பட்டு நிற்கும் சமூகத்தின், உயர்விற்கு அடிகோலுவார்களாக! அதோடு அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் பெண்களுக்கும் உண்மையை எடுத்துக்கூறி உன்னதமடைவார்களாக!

"உழைப்பிற்கும், தொழிலுக்கும் வந்தனை செய்து, வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்து பிழைப்பிற் கென்செய்வோ மெனும் ஏக்கந்தவிர்த்து பேரின்ப சமதர்ம வாழ்வடைந்திட..." உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்! பெண்மக்களே! விழியுங்கள்!! பேதமகற்றிட உழையுங்கள். துன்பந்தவிர்த்து இன்பமடைந்திட "மே" தின விழாவில் கலந்து தொண்டாற்றுங்கள்.

---

4-ம் பக்கத்தொடர்ச்சி

அவர்கள் தந்தையாகிய ஆதத்தைத்தவிர வேறு ஒரு மனுஷனும் அச்சமத்தில் இருந்ததில்லையாதலால், ஒரு சமயம் சகோதரிகளையே கூடப்பிறந்த சகோதரர்கள் விவாகம் செய்து கொண்டார்களோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது. இது எப்படியிருந்தபோதிலும் மேற்கூறிய காரணங்கள் இரண்டில் ஒன்றின்படியேனும் நடந்திருக்க வேண்டும் என்றும் இன்றேல் வேறுவழியில்லையென்றும் தெரிய வருகின்றபடியால், தங்கள் ஆதித்தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள் விவாக விஷத்தில் நடந்துகொண்டது போல் தற்கால முஸ்லீம்களும் ஏன் விவாக விஷயத்தில் நடந்துகொள்கின்றார்களில்லை? அவ்வாறு செய்வது இவர்கள் (முஸ்லீம்கள்) அபிப்பிராயத்திற்கு மாறாகவோ அல்லது வெட்கமாகவோ இருந்தால் அது அவர்கள் ஆதித்தாய் தந்தையின் பேரிலும் அவர்களை சிருஷ்டித்த கடவுள் (அல்லாஹ்) பேரிலும் குற்றம் சாட்டுவது போலாகாதாவென்று கேட்க விரும்புகின்றோம். [4] அன்றியும் மனிதர்களுக்கு ஆதித்தாய் தந்தை ஆதாமும், ஹவ்வாவும் என்றால் மிருககங்களுக்கும் பட்சிகளுக்கும் ஆதித் தாய் தந்தை யார்? எனவும் அறிய விரும்புகின்றோம்கடவுள் சர்வ சக்தி உடையவர் என்றால் உலகில் நிகழும் பூகம்பம், இடி, யுத்தம், பஞ்சம், நோய், அகாலமரணம், கொலை, களவு, விபசாரம் போன்ற அக்கிரமங்களை அவர் சக்தியால் தடுத்து ஏன் மக்கள் நிம்மதியாய் வாழும்படி செய்யக்கூடாது? என்று கேட்க விரும்புகிறோம் [தன்னையே ஞாயப்படி கண்டிக்கும் பகுத்தறிவாளிகளுக்குப் பதில் சொல்லத் தெரியாது. திண்டாடும் கடவுள் இதர விஷயங்களை எவ்வாறு கவனிப்பார்! பாவம்!! அவர் (கடவுள்] சர்வ சக்தி வாய்ந்தவரென்று வீண்பழி சுமத்துவது அவரைப் பரிகாசம் பண்ணுவது போலாகுமன்றோ?] [5] கடவுள் அளவற்ற அன்பும் நிகரற்ற கருணையுமுடையவரென்றால், மனித சமூகத்தை வாட்டும் கொடிய துன்பங்களையும், சகல அக்கிரமங்களையும் அடியோடொழித்து மக்கள் சாந்தி சமாதானமாய் இன்புற்றிருக்கும்படி செய்து தனது அளவற்ற அன்பையும் நிகரற்ற கருணையையும் மனிதர்பால் ஏன் காட்டிக்கொள்ளக்கூடாது? கடவுள் பட்சபாதமற்ற மகா ஞாயமுடையவரென்றால், உலகில் மனிதர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் ஒரு மனிதன் எவ்வாறு ஞாயப்படி குற்றவாளியாவானோ அவ்வாறே எல்லாம் அவர் கடவுள் சித்தப்படியே நடைபெருகிறதென்றும், அவர் சித்தமின்றேல் உலகில் ஒன்றும் நடைபெருது என்ற முஸ்லீம்கள் கூற்றுப்படி உலகில் நடக்கும் சகல குற்றங்களுக்கும் அவரே காரணமாயிருப்பதால், அவருக்கு (கடவுளுக்கு) ஞாயமென்பது கொஞ்சமேனும் இல்லையென்று சொன்னால் அது குற்றமாகுமா? [7] கடவுள் உண்மையுடையவராயும், உண்மையை விரும்புகிறவராயும், உண்மையை நிலைநாட்டுபவராயுமிருந்தால் அவர் விஷயத்திலேயே சந்தேகங்கொண்டு இனறு மனித சமூகம் மண்டைகளை உடைத்துக் கொள்வதைத் தடுத்து முஸ்லீம்கள் சொல்வது உண்மையா—அல்லது பகுத்தறிவாளிகள் சொல்வது உண்மையா, என்பதை ஏன் கடவுள் விளப்பி உண்மையை நிலைநாட்டக்கூடாது? [8] கடவுள் சகலமும் அறிந்த திரிகால ஞானியென்றால் தன்னை (கடவுளை) பிற்காலத்தில் பகுத்தறிவாளிகள் கண்டிப்பார்களென்பதை அவரது திரிகால ஞானத்தாலுணர்ந்து பகுத்தறிவாளிகளால் கண்டிக்கப்படாத நிலையில் மனித சமூகத்தை ஏன் நடத்தக்கூடாது? [9] கடவுள் செய்கையில் குற்றஞ்சொல்ல முடியாதென்றால், இதுகாறும்கூறிவந்தவிஷயங்கள்எல்லாம் கடவுள்மேல்சாட்டப்பட்ட குற்றங்களே என்று இங்கு குறிப்பிடாமலே விளங்கும் (10) கடவுள் எல்லாவறறையும் அவர் சொந்தப் பிரியப்படியே செய்து வருகிறார் என்றால், இன்று உலகில் நிகழும் எல்லா விதமான துன்பங்களும் அவர் [கவுவுள்] பிரியமாயிருந்தால் அப்படிப்பட்ட கடவுளின் பிரியம் இனிபெங்களுக்கு வேண்டாமென்றும் எங்கள் பிரியம்போல் (அதாவது) சண்டை சச்சரவு வறுமை நோய் போன்றவைகளில்லாமல் எல்லோரும் ஒற்றுமையாக இன்புற்றிருக்க வேண்டுமென்று நாங்கள் (மனித சமூகம்)கோருகிறபடி செய்ய கடவுளால் முடியாவிடில் இனியேனும் எங்கள் [மனித சமூகத்தின்] விஷயத்தில் தலையிடாமல் சொந்த விஷயங்களை கவனித்துக் கொள்ளென்றும் வீரகர்ஜனை செய்வதை எங்கும் நிறைந்த கடவுள் அறியார்போலும் [11] கடவுளன்றி அணுவும் அசையாதென்றால், இதுகாறும் மனித சமூகத்தைச் சொல்லொண்ணாத் துயரத்திற்குட்படுத்திச் சீரழித்து வந்த மதங்களையும் அவைகளை உண்டாக்கின கடவுளையும் இப்பிரபஞ்சத்தின் கண்ணே இனியொருபோதும் தலைகாட்டா வண்ணம் சுட்டுப் பஸ்பமாக்கி விட்டு மனித சமூகம் சந்தோஷமாக இன்புற்று வாழ்வதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் இன்று பகுத்தறிவாளர்களால் செய்யப்பட்டு வருகிறதும், அந்தக் கடவுளின் அசைவுதான் என்பதை இனியேனும் முஸ்லீம்கள் உணர்ந்து அவர்கள் நம்பும் கடவுளின் அசைவுகளை எதிர்க்காமலிருப்பார்களாக!

---

## சுயராஜ்யம் யாருக்கு?

(ஆசிரியர்:- தோழர் ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்.,)

சுயராஜ்யம் யாருக்கு என்ற புஸ்தகத்தின் மூன்றும் பாகம் அதாவது எது வேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகம் அச்சாகி விட்டது. புஸ்தகம் வேண்டுமென்று ஏற்கனவே பணமும், ஸ்டாம்பும் அனுப்பியவர்களுக்கு, இவ்வாரத்திற்குள் புஸ்தகங்கள் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே கைவசமிருப்பதால், புஸ்தகம் வேண்டுவோர் முந்திக்கொள்ள வேண்டும்.

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள்:—

உலக முக்கிய பிரச்சினை, தேசியமும் மூட நம்பிக்கையும், சுயராஜ்யமும் தனி சொத்துரிமையும் சமதர்ம லக்ஷணம், சமதர்மத்தில் குடும்பம், மதம், ஜாதி, தேசிய அரசுகள் இருக்கா, சமதர்ம ஆக்ஷிமுறை, ஜாதி மதம் ஒழிக்கும் வழி, தனிவுடமையின் கொடுமை, பொதுவுடமை விளக்கம், சமதர்மத்தில் பொருள்கள் விநியோகம், சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

இதன் விலை அணு 3.

கிடைக்குமிடம்:—

சமதர்மப் பிரசுராலயம்,
22, சவுத்பீச்ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அநுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணா 4.

## பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணா 4.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணா 3.

## மேயோ கூற்று.

[illegible] த்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

# பகுத்தறிவு வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, [illegible]தல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா [illegible].

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா [illegible].

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், [illegible]வைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

## மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A. B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா [illegible].

## கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், [illegible] பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. 100 பக்கங்கள் கொண்டது. விலை அணா [illegible].

## மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. [illegible]ச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணா 3.

## நான் சம்சயவாதி ஆனதேன்!

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா [illegible].

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தக [illegible] ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்ப வேண்டும்.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்**
**லிமிடெட் [illegible] ஈரோடு.**

# பகுத்தறிவு.

## சுயமரியாதை தினசரி.

சமய சமூக அரசியல் விடுதலைக்கு பரிந்து போராடும் தமிழ் தினசரி இது ஒன்றே. சர்வ தேசசம்மந்தமான விடுதலைபோராட்டச்செய்திகள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும். ஆணித்தரமான அபிப்பிராயங்களும், அழுத்தமான கண்டனங்களும், அவசியம் காணலாம்.

எங்கும் கிடைக்கும்.

**தனி இதழ் காலணா.**

தபாலில் மாத சந்தா ஒரு ரூபாய்.

ஆறு மாத சந்தா ரூ. 5.

வருட சந்தா ரூ. 9.

விலாசம்:— மானேஜர்,

"பகுத்தறிவு" ஈரோடு.

...d and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.